பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நிர்வாகத்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 05 சனிக்கிழமை (21.09.2002) தொலைபேசி- 2223378 ஒலி 276

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

✦ சகல முஸ்லிம் கட்சிகளுடனும் ஆராய்வு ✦ விரைவில் வன்னி பயணம்

# முஸ்லிம்களுக்கான தீர்வுத் திட்டம்

# இறுதிப் பேச்சில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் ஹக்கீம் பேட்டி

(நமது நிருபர்)

**இந் நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பூரணமாக நிறைவேற்றக் கூடிய வகையில் தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரித்து தாய்லாந்தில் இடம்பெறவுள்ள இறுதிக்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பிக்கப் போவதாகவும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து வன்னிக்குச் சென்று புலிகளுடன் பேசவுள்ளதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

கடந்த 3 தினங்களாக தாய்லாந்தில் இடம்பெற்ற அரசு - விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசு தரப்புப்பிரதிநிதியாகக் கலந்து கொண்டு நேற்று கொழும்பு திரும்பிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எமது செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுமூகமான முறையில் நடந்து முடிந்த தாய்லாந்துப் பேச்சு வார்த்தை தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அப் பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த 3



தினங்களாக நடைபெற்ற பன்னிரண்டரை மணித்தியாலப் பேச்சுவார்த்தையின் போது சில பிரச்சினைகள் ஏற்பட்ட போதும் அப் பிரச்சினைகள் மிகவும் ஆழமாகவும், நுணுக்

(10ம் பக்கம் பார்க்க)

### பில் கிளிங்ரனுடன்

## பேச்சின் விபரம் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறப்படும்

### நோர்வே அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த முதற்கட்ட சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கிக் கூறவுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

அடுத்த கட்டச் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு இது மிகவும் உந்து சக்தியாகவும் அமையும்.

அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட பகுதிகளை புனரமைப்பு செய்வதற்கு சர்வதேச நாடுகளின் நிதியுதவி அவசியமாகத் தேவைப்படுகின்றது.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதியுதவியை பெறும் பொருட்டு இன்று அமெரிக்கா சென்று அந் நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆமிடேஜ்ஜைப் சந்தித்து பேசவுள்ளதாகவும் அப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

(த)

## எதிர்க்கட்சித் தலைவரும் அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எமது செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியின் போது மேற்கண்டவாறு தெரி

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த 3

கள் மிகவும் ஆழமாகவும், நுணுக்

(10ம் பக்கம் பார்க்க)

வடைந்துள்ளது.

அடுத்த கட்டச் சமாதானப் பேச்சு

## பில் கிளிங்ரனுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

(நியூயோர்க்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரனை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து பில் கிளிங்ரன் மகிழ்ச்சி தெரிவித்ததுடன் இலங்கைக்கான அமெரிக்க அரசாங்கத்தின் உதவியை மேலும் அதிகரிக்க தம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

அதேவேளை கடந்த வெள்ளியன்று அமெரிக்கா பயணமான பிரதமர் இன்று நாடு திரும்பவுள்ளார்.

(த)

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

## இந்தியாவில் வைத்து எரிக்சொல் வேண்டுகோள்

(புதுடில்லி)

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மக்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் உதவிட வேண்டும என நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் புதுடில்லியில் இருந்தவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு புதுடில்லி சென்ற எரிக்சொல் ஹெய்ம இந்திய வெளியுறவுச் செயலாளரை சந்தித்து உரையாடிய போதே மேற்கண்ட வேண்டுகோளை சர்வதேச சமூகத்திடம் விடுத்தார்.

யுத்தம் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கா விட்டால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படும்.

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு இத்தகைய மீள் குடியேற்றம் அவசியமாகும். இதற்கு சர்வதேச ரீதியில் பாரிய ஆதரவு தேவைப்படுகிறது. இந்த ஆதரவை சர்வதேச சமூகத்தினர் இலங்கை அரசிற்கு உதவ வேண்டும்.

வடக்கு கிழக்கில் மீள் குடியேற்றத்துக்கு அரசு - விடுதலைப்புலிகளும் சாத்தியமான சகலதையும் மேற கொண்டு வருவதனால் சர்வதேச உதவி அவசியம் எனவும் எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தி கூறினார்.

(ம)

## எதிர்க்கட்சித் தலைவரும் அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று மாலை அமெரிக்காவுக்கு பயணமாகியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அரசியல் குழுக் கூட்டத் தொடரில் மகிந்த உரையாற்றுவார் என்று எதிர்க்கட்சி அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்காவின் உயர் அரசியல் தலைவர்கள் ராஜதந்திரிகள் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காவிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கிளை பொதுக் கூட்டத்திலும் மகிந்த உரையாற்றவுள்ளார்.

இலங்கைத் தலைவர்களான

(10ம் பக்கம் பார்க்க)

# மீள் குடியமர்வுக்கு தாய்லாந்து உதவும்

(பாங்கொக்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலக்கண்ணிகளை அகற்றுவதற்கும் இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துவதற்கும் தேவையான உதவிகளை வழங்குவதற்கு தாய்லாந்து அரசாங்கம் முன்வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே தாய்லாந்து அரசாங்கம் இந்த உதவியைச் செய்வதற்கு முன்வந்துள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் சந்திப்பு

(வவுனியா)

நோர்வேயின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே மீள் குடியேற்றம் தொடர்பாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் யுத்த நிறுத்தக்

(02ம் பக்கம் பார்க்க)

# 19வது திருத்த சட்டத்திற்கு பொ. ஐ. மு ஆதரவளிக்காது

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் 19வது அரசியல் அமைப்பு திருத்த சட்ட மூலத்திற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்த எந்தவொரு எம்.பியும் ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என்று எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டமொன்று நேற்று மாலை வத்தளையில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றி மகிந்த ராஜபக்ஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கம் சுப நேரத்தில் இத் திருத்தச்சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தாலும் கூட அது ஒருபோதும் வெற்றியடையமாட்டாது. பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் எவரும் ஆதரித்து வாக்களிக்காத நிலையில் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்

(02ம் பக்கம் பார்க்க)

# சம்பளம் யாழில்; கடமை கொழும்பில் பெண் டாக்டர் தில்லுமுல்லு

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கான சம்பளத்தைப் பெற்று வந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண் டாக்டரின் இச் செயற்பாடு குறித்து சுகாதார அமைச்சுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து

(02ம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலிருந்து வன்னிவர 250 புலிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் 250 போராளிகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து தரைமார்க்கமாக வன்னி செல்லுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. இச்சந்திப்பிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ இத் தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தரையூடாக வன்னி செல்வதற்கு தம்மை அனுமதிக்க வேண்

(10ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 1மேற்படிப்பு வரை வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் ஆங்கிலத்தில் கூடிய கவனம் சலபாடக்கட்டணம் 100/-வறியகுடும்ப மாணவர்கட்கு இலவசம் பதிவுக்கு தலைமைஆசிரியர்ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி,426 (302) கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். (5924)

# தாய்லாந்து பேச்சுக்களின்போது கட்டம் கட்டமான தீர்வு

## நாடுதிரும்பிய அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்இடையில் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமான பேச்சுவார்த்தைகளின் போது கட்டம் கட்டமாக சிறந்த முன்னேற்றம் காணப்படும்என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் ஆரம்பமான முதல்சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அரச பிரதிநிதியாக கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் இரவு நாடுதிரும்பிய போது விமானநிலையத்தில்வைத்து வானொலி நிலையமொன்றுக்கு பேட்டியளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சட்டாஹிப் கடற்படைத் தளத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இருதரப்பு பிரதிநிதிகளும் வேறுபாடு எதுவுமின்றி பரஸ்பர புரிந்துணர்வுடன் பழகும்சூழ்நிலை இருந்ததாகவும்,

பேச்சுக்களின்போது சிறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டபோதிலும் அதனை மிகவும் பக்குவமானமுறையில் களைந்துகொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டதாகவும், இப்பேச்சுவார்த்தை இன்னும் ஒரிரு சுற்றுக்களில் நிறைவுறும விடயமல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பேச்சுக்களின்போது ஒரிரு விடயங்களை தவிர திட்டமிட்ட ஏனைய அனைத்து விடயங்களிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் மீளகுடியேற்றம், நிலக்கண்ணி வெடிகளைஅகற்றுதல் போன்றவற்றில் பூரண இணக்கம் காணப்பட்டதாகவும்,

இதில் முஸ்லிம்மக்களைப் பொறுத்தமட்டில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய பல விடயங்களை தான் முன்வைத்துள்ளேன் என்றும்,

இப்பேச்சுவார்த்தைகளில் கட்டம் கட்டமான முடிவு காணப்படும்என்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டிருப்பது பிரதானமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க-08)

## ஊழியர் தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தின விழா இன்று பிற்பகல் 2-15 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி கலாராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ½

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்திபெற்ற சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலத் திருவிழா இன்றுநடைபெறவுள்ளது.

காலை 6-00 மணிக்கு முதல் திருப்பலிப் பூசையும் காலை 9-00 மணிக்கு திருநாள் திருப்பலி பூசையும் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சிந்தாத்திரை மாதாவின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (த-6)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள்விபத்தில் பயணம் செய்த ஆறுமுகம் செல்லையா வயது 55 (இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம்) என்பவர் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துதொடர்பான விசாரணைகளை யாழ். மாவட்ட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (க-06)

## வான்-பஸ் விபத்தில் 3 வயதுப் பாலகி மரணம்!

(கிளிநொச்சி)

வான்ஒன்றும் பஸ்ஒன்றும் மோதியதில் வானில்பயணம் செய்த ஸரனிஸலோஸ்டோன் என்னும் பெண் குழந்தை (வயது3) ஸ்தலத்திலேயே பலியானார். அவரது தாயார் மரியராணி வயது43 படுகாயமடைந்தநிலையில் கிளிநொச்சி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பழைய முருகண்டியில் இடம்பெற்றஇச்சம்பவத்தின்போது கிளிநொச்சி காவல்துறையினர் காயமடைந்தவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

குழந்தையின் மரணம் தொடர்பாக கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே வி கே கிரிலோகமூர்த்தி பிரேதபரிசோதனையின்பின் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார் கிளிநொச்சி காவல்துறையினர் இவ்விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## 19-வது திருத்த

தில் வெற்றிபெறமாட்டாது.

திருத்தச்சட்ட மூலம் வெற்றிபெறும் என்று அரசு காணும் கனவு பகல் கனவாக மாறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## சம்பளம்

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அப் பெண் டாக்டர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக மேலும் விசரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம)

## மன்னார் கடலில் பிடிபட்ட இந்திய மீனவர்கள் 103 பேரும் நேற்று விடுதலை

(கொழும்பு)

மன்னார் கடற் பிரதேசத்தில்சட்ட விரோதமான முறையில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இந்தியமீனவர்கள் 103 பேருமஅவர்களுக்கு சொந்தமான 25 படகுகளும்நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டன.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் இந்தியத் தூதரக உயர் அதிகாரி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு நடத்திய பேச்சுவார்த்தைகளினை அடுத்தே இம் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பொலிஸ்மா அதிபர் டபிள்யூஎம். தர்மரட்ணதெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு மன்னார் பேசாலைப் பகுதி கடற்பரப்பில் சட்ட விரோதமாக கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இவர்கள் அனைவரும் பேசாலைமீனவர்களால் பிடிக்கப்பட்டனர்.

இலங்கையை சூழவுள்ள கடற்பிரதேசங்களில் இந்திய மீனவர்கள் இது போன்றபல் வேறு விதமான சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவந்ததும் தெரிந்ததே. (ச-8)

## 2004ம் ஆண்டில் பெருமளவு கடற்பரப்பு இலங்கைக்கு சொந்தமாகும்

(கொழும்பு)

2004ம்ஆண்டிலே இலங்கையைப் போன்று 23மடங்கு விஸ்தீரணமுள்ள கடற்பரப்பு இலங்கைக்கு சொந்தமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கடல்வள அமைச்சர் மகிந்தவிஜயசேகர.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், சர்வதேச கடல்சட்டத்தில் எல்லைக்கு ஏற்பவே இதற்கானநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறிய அமைச்சர் தற்போது 200 சதுரகிலோ மீற்றர் பரப்புள்ள கடல்பகுதியே இலங்கைக்கு சொந்தமாக உள்ளது என்றும் புதியஆய்விற்குஏற்ப 2004ம்ஆண்டு புதியகடல்வலயத்திற்குரிய வரைபடம் உருவாக்கப்படும் எனவும் கூறிய அமைச்சர்,

இத்திட்டத்திற்கு 6மில்லியன் அமெரிக்கடொலர் செலவாகும் எனவும் இதற்கான பத்திரம் அமைச்சரவையில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறினார்.

(க)

## கண்காணிப்புக்குழு

கண்காணிப்புக்குழு வவுனியா பிரதிநிதி விடுதலைப்புலிகளின் வவுனியாமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளஞ்செழியன் ஆகியோரைச்சந்தித்து பேச்சுநடத்தியுள்ளார்

இச்சந்திப்பின்போது வவுனியாவில் இவ்வருடஇறுதிக்குள் சுமார்5ஆயிரம் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளதுடன் இது வரைகாலமும் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களுடன் மட்டும் பேச்சுக்கள் நடத்தியதாகவும் இப்போது மாவட்டரீதியில் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்திவருவதாகவும் இச்சந்திப்புக்கள் எமதுஉறவுகளை மேலும் பலப்படுத்த உதவும் எனவும் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஹெவ்டே தெரிவித்துள்ளார்.

(ம)

## சமாதானம் பேணப்படுமானால் இலங்கையின் 2-வது தலைநகர் யாழ்ப்பாணம் என்பதில் ஐயம்இல்லை

### மக்கள் சீனகுடியரசு தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானத்தை கட்டிக்காக்க பாடுபட வேண்டும். அவ்வாறு சமாதானம் பேணப்படுமானால் இன்னும் 5 வருடங்களில் இலங்கையின் இரண்டாவது தலைநகராக யாழ்ப்பாணம் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

மக்கள சீனக் குடியரசின் தூதுவர் எச். ஆர். ஜியாங் ஜின் சிங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவர் நேற்று மு.ப.9.30 மணிக்கு யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்றஇக் கூட்டத்தில் சீனத்தூதரக உதவி அதிகாரிகள், புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் ரி குமாரதாசன் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர். செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. ராஜதுரை மற்றும் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்; அரசும் விடுதலைப்புலிகளும் யாழ் குடாநாட்டு அபிவிருத்திப்பணிகளில் இணைந்து செயற்பட வேண்டும் அதற்கான உதவிகளை நாம் செய்வதற்கு தயாராக உள்ளோம்.

அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானத்தை கட்டிக்காக்க பாடுபடவேண்டும். அப்படி பாதுகாக்குமானால் இன்னும் 5 வருடங்களின் பின்னர் இலங்கையின் 2 வது தலைநகரமாக யாழ்ப்பாணம் திகழும் என்பது எனது கருத்தாகும்.

1956 ஆம் ஆண்டு காலத்தில் இருந்து மிகவும் நெருக்கமான உறவை சீனா-யாழ்ப்பாணத்துடன் கொண்டுவருகின்றது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் இலங்கை மக்களுடைய வீடுகள் சொத்துக்கள் பெருமளவில் அழிக்கப்பட்டதனை நான் அறிவேன்.

ஆனாலும் வடபகுதி மக்களுடைய அழிவுப் பிரதேசங்களை நான் முகமாலை ஊடாக வரும் போது பார்த்துக் கொண்டு வந்தேன் அழிவுகளுக்குள்ளும்இந்தமக்கள்வாழ்வதை இட்டு மனம் வேதனை அடைகின்றேன் என சீன மக்கள் குடியரசின் தூதுவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் அழிவுகளினால் அழிக்கப்பட்ட வடபகுதி வீடுகள், சொத்துக்களை தேவையின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம்.

அரசும் புலிகளும் இந்த சமாதான முன்னெடுப்புக்களையும், ஒத்துழைப்புக்களையும் மிகவும் நெருக்கமாகவும் பாரிய மாற்றங்களுடனும் கொண்டுவரமுன்வரவேண்டும் என அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

சீன அரசின் நட்புறவுப் பாலம் யாழ் நகர மக்களுடன் இரண்டறக்கலக்கும் காலம் வரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் செயலகக் கூட்டத்தின் பின்னர் காங்கேசன்துறை, நாகவிகாரை, நல்லூர் மற்றும் குடாநாட்டின் அழிவுப் பிரதேசங்களையும் பார்வையிட்டுள்ளார்.

(க-6,77)

## கிளிநொச்சியில் மீளக்குடியேறும் அரசஊழியருக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களுக்கு மீள் குடியேற்றப்பணமும் ஏனைய நட்டஈட்டுப்பணமும் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறான கோரிக்கை ஒன்றினை கிளிநொச்சிமாவட்ட அரசஊழியர் சார்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.

1996ஜூலை 26ந்திகதி இடம்பெற்ற சத்ஜெய இராணுவநடவடிக்கையை அடுத்து கிளிநொச்சியில் உள்ள அரச ஊழியர்களும் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து நிர்க்கதியானநிலையில் மீள கிளிநொச்சியில்குடிஏறியுள்ளதாகவும் எவ்வித அரசஇழப்பீடும்இதுவரை வழங்கப்படவில்லை.

இதேவேளை கிளிநொச்சி நகரப்பகுதியில் மீளக் குடியேறியோருக்கு இதுவரை எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

பாரதிபுரம், கிருஷ்ணபுரம் தொண்டமான்நகர். விவேகானந்த நகர்ப்பகுதிமக்களுக்கு மட்டும் இதுவரை மீளக்குடியேற்றப் பணம் வழங்கப்பட்டுள்ளது. (வ)

## மாட்டுவண்டி சவாரி

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் சந்தரோடை மைதானத்தில் நாளை பிற்பகல் மாட்டு வண்டிச் சவாரி இடம்பெறவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

# அச்சுறுத்தல் தொடர்ந்தால் வெகுஜனப் போராட்டம் வெடிக்கும்

### வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

படையினர் தரப்பில் இருந்து மக்களுக்கு அச்சுறுத்தல் தொடருமானால் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது தவிர்க்க முடியாததாகி விடும்.

வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது ;

கடந்த இரண்டாம் திகதி பருத்தித்துறைப் பாடசாலைகளின் முன்பாக இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக மீனவர் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளையும், மாணவர்களையும், பொது மக்களையும் இரவிலும் பகலிலும் படையினர் தேடி வருவதாக, பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நடவடிக்கையானது பாதுகாப்புப் படையினர் சமாதானச் சூழலை தவிர்த்து போருக்கு ஆயத்தம் கொள்கின்றனரோ என எண்ண வைக்கிறது.

அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பகைமையை மறந்து சமாதானத்தை முன்னெடுக்க ஒரே மேசையில் உட்கார்ந்து பேச்சுவார்த்தை நடத்துகின்ற இவ் வேளையில் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த மக்கள் மனங்களை வெல்ல வேண்டும்.

பாதுகாப்புப் படையினர் அதற்கு ஊறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

## தடுப்பு அணை அமைப்பு வேலைகள் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

நியாப் திட்டத்தின் கீழ், புளியங்கூடல் குறுக்குக்கடல் உவர்நீர்த் தடுப்பு அணை அமைப்பு வேலைகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின.

புளியங்கூடல் விவசாயிகள் சம்மேளனம் ஊடாக இவ் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில், இப்பகுதிப் பொதுமக்கள் இணைந்து அண்மையில் அணை அமைக்கப்படும் இடத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். (உ-75)

## வாரத்தில் 6 நாட்கள் கால்நடை வைத்திய நிலையம் இயங்கும்

(ஊர்காவற்றுறை)

வேலணை கால்நடை வைத்திய நிலையத்தில் போயா, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் சேவையினைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான நோய்களுக்கு சிகிச்சையினையும், செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவையினையும் இந்நாட்களில் பெறமுடியும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

தீவகத்திற்கு பொதுவாக ஒரே ஒரு அரச கால்நடை வைத்திய நிலையம் வேலணை வங்களாவடிச் சந்தியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## 49 கிணறுகள் புனரமைப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குள் இனங் காணப்பட்ட சேதமடைந்த 49 பொதுக் கிணறுகள் 'நெக்கோட்' திட்டத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-77)

## உறுப்பினர்களை அதிகரிக்கும் முயற்சியில்

### லயன்ஸ்கழகங்கள் முனைப்பு

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் இவ்வருடத்தில் ஒரு லட்சம் உறுப்பினர்களைத் திரட்டும் இலக்கினைக் கொண்டு செயல்பட ஆரம்பித்துள்ளன.

உலகில் 185 க்கு மேற்பட்ட நாடுகளில் இயங்கிவரும் லயன்ஸ்கழகங்களில் கணிசமான அங்கத்தவர்கள் அங்கத்துவத்தில் இருந்து விலகிவருவதாலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இதேவேளை, இலங்கையிலுள்ள மூன்று மாவட்டங்களுள், 306 பி மாவட்டத்தில் மட்டும் ஆயிரம் உறுப்பினர்களைஇணைத்துக் கொள்ளும் முயற்சியில் லயன்ஸ் தலைவர்களும், பிரமுகர்களும் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வடபகுதிலுள்ள15க்குமேற்பட்ட கழகங்கள் 306 பி மாவட்டத்திலே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## பாடசாலை வளவில் கண்ணிவெடி அபாயம் முற்றாக நீங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தை மீளஇயக்குவதற்கான சூழ்நிலை இன்னமும் அங்கு ஏற்படுத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது.

மேற்படி பாடசாலை வளவில் படையினர் கண்ணிவெடியை அகற்றிய போதிலும் முற்றுமுழுதாக அங்கு கண்ணிவெடி இல்லை என்பதை அவர்கள் இன்னமும் உறுதிப்படுத்தவில்லை.

இந்தநிலை காரணமாக சேதமடைந்த பாடசாலைக் கட்டடத்தையோ மலசலகூடங்களையோ புனரமைத்தல் பணியை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படிபாடசாலையை மீள இயங்குவது குறித்து சம்பந்தப்பட்டபாடசாலைச் சமூகம் பல்வேறு தரப்புகளையும் நாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அரியாலைப்பகுதியில்உள்ள ஏனைய பாடசாலைகளைமீள இயக்குவதிலும் இதே பிரச்சினைகளை எதிர்நோக்கப் படுவதாக தெரியவருகிறது.

## பொலிஸாருடன் படையினர் இணைந்து வீதிகளில் சோதனை

(கொழும்பு)

சமாதான முயற்சி நடைபெறும் இவ்வேளையில் பல மாதங்களுக்குப் பின்னர் கொழும்பில் இராணுவமும், பொலிஸாரும் இணைந்து வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வீதியில் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் மட்டும் ஈடுபட்டு வந்தனர் தற்போது படையினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## மாதாந்த கூட்டம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை10.30மணிக்கு அ நல்லதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. (க-77)

## திருடர் கோஷ்டி பிடிபட்டது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை பகுதியில் நீண்டகாலமாக திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுவந்தகுழு ஒன்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

கொழும்புத்துறை சுவாமியார் வீதியிலுள்ள வீடு ஒன்றில் ஓடுகள் கற்கள் போன்றவற்றை திருடியபோது அப்பகுதிமக்களால்பிடிக்கப்பட்ட இக்குழு, வீட்டு உரிமையாளரிடமும்அயலவர்களிடமும்மன்னிப்புக் கோரியதையடுத்து எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டது. (இ-262)

## காவலரணில் இருந்த துப்பாக்கியை காணோம்

### படையினர் சல்லடை போட்டு தேடுதல்

(மந்திகை)

அல்வாய்சக்கோட்டைப்பகுதியிலுள்ள இராணுவகாவல் அரணிலிருந்து துப்பாக்கி ஒன்று கடந்த 16 ஆம் திகதி இரவுமர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மறுநாள்அப்பகுதி வீடுகள், கிணறுகள், பற்றைகளைபடையினர் சுற்றிவளைத்து காணாமற்போன துபபாக்கியை தேடிய போதிலும் கண்டெடுக்கப்படவில்லைஎன தெவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அப்பகுதி கரையோர மீன்பிடிக் குடிசைகளில் இரவு தங்கியிருந்த 10 பேர் இராணுவத்தினரால் கைது செய்யபபட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இப்பகுதியில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் எல்.எம்.ஜி துப்பாக்கி ஒன்று அப்பகுதி இளைஞர்களால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## அச்சுவேலிகைத் தொழில் பேட்டை கோழிப்பண்ணைக்கு மின்சாரம் வழங்க மின்சாரசபை பின்னடிப்பு

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தினால் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில்கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடத்தப்பட்டு வரும் பாரிய கோழிப் பண்ணைத்திட்டத்துக்கு இலங்கை மின்சார சபை மின் விநியோகத்தினை வழங்குவதற்குத் தொடர்ந்தும் தயக்கம் காட்டி வருவதால், குறித்த அபிவிருத்தித் திட்டம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

இத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்(யு என், டி.பி) வேண்டிய உபகரணங்களையும் மற்றும் வளங்களையும் பெரும் மூலதனச் செலவில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் கோழிப்பண்ணைத்திட்டமே யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மிகவும் பெரிய திட்டமாகும். இங்குஉற்பத்தி செய்யப்படும் கோழிக் குஞ்சுகளை குடாநாட்டில் உள்ள கோழிப்பண்ணையாளர் கள் கொள்வனவு செய்து வருகின்றனர்.

ஆயினும் குறித்த திட்டத்துக்கு வேண்டிய மின்விநியோகத்தினைஜெனரேட்டர் மூலமே பெற்று வருவதால் கோழிக்குஞ்சுகளின்விற்பனை விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கூடுதல் விலை கொடுத்து கோழிக்குஞ்சுகளைக் கொள்வனவு செய்ய பலரும் தயக்கங்காட்டிவருகின்றனர்.

இது விடயம் தொடர்பாக குறித்த பண்ணையினை நிர்வகித்து வரும் சமாசத்தின் முகாமையாளரை அணுகிக் கேட்ட சமயம் இத்திட்டத்துக்கு மின் விநியோகத்தினை வழங்கும் படிகடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இலங்கை மின்சாரசபையிடம் கோரிக்கை விட்டு வந்துள்ள போதிலும் கூட, மின்சாரம் இன்றுவரை வழகங்ப்படவில்லை.

கோழிப்பண்ணையில் தற்போது 2ஆயிரத்துக்கு மேற்பட்ட கோழிக் குஞ்சுகள் உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இதேசமயம், தென் இலங்கையில் இருந்து குடாநாட்டுக்குதரை வழிப்பாதை மூலம் கொண்டுவரப்படும் கோழிக்குஞ்சுகள் மிகவும் மலிவு விலையில் விற்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் இங்கு உற்பத்தியாகும் கோழிக் குஞ்சுகளுக்கு அதிகவிலை கொடுத்து கொள்வனவு செய்வதற்குத் தயக்கம் காட்டி வருவதாகவும் சுட்டிக்காட்டினார். (உ-77)

## கைதானவர்களை விடுவிக்க ம. உ. ஆ. கு. நடவடிக்கை

(மந்திகை)

பருத்தித்துறை இராணுவ முகாமின் காவலரண்கள் சேதப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூவர் பற்றி இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதேச இணைப்பாளர் ஆ.பி.சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் 2 ஆம் திகதி முகாம் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 10 ஆம் திகதி அன்று ஆறுமுகம் விக்கினராஜா இ.உதயசீலன் ஆகியோரும் 12 ஆம் திகதி பொன்னுச்சாமி ஜெயரட்ணமும் கைது செய்யபபட்டிருந்தனர்.

அவர்களை விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினர் மனித உரிமை ஆணைக்குழுவிடம் புகார் செய்திருந்தனர்.

இதனை அடுத்து இணைப்பாளர் சமாசத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில், சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர், மற்றும் பொலிஸாரிடம் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், சம்பந்தப்பட்ட மூவரையும் சிறைச்சாலையில், சென்று பார்வையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக மேலதிக விபரங்களை பெறுமாறும் மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் கோரியுள்ளார்.

இதேவேளை, பருத்தித்துறை இராணுவ முகாம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இன்னும் 6 பேரை தேடிவருவதாக பருத்தித்துறை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

## அரியாலைப் பகுதியில் புதிய முகாம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை முள்ளிப்பகுதியிலுள்ள பொன்னம்பலம் வீதியிலே பொதுமக்களின் வீடுகளை இணைத்து இராணுவத்தினர் முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

மேற்படி வீடுகள்சேதமடைந்திருந்தமையால் வீட்டு உரிமையாளர்கள் இவ்வீடுகளில் குடியமரவில்லை இந்நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி இராணுவத்தினர் முகாமை அமைத்து வருகின்றனர்.

தற்பொழுது அமைக்கப்பட்டுவரும் முகாமிற்கு அண்மையில் மக்கள் குடியிருப்புக்கள் நெருக்கமாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

# மத்திய கிழக்கில் மீண்டும் வன்முறை
# ஐ.நா.செயலாளர் பெரும் கவலை

(ரெல்அவீவ்)

மத்திய கிழக்கில் மீண்டும் வன்முறைகள் வெடித்ததை அடுத்து ஐககிய நாடுகள் பொதுச்சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் பெரும் கவலை தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் சிலகாலம் அமைதி நிலவிவந்த போதும் இஸ்ரேலில் அண்மையில் ஏற்பட்ட வெடிவிபத்தைத் தொடர்ந்து வன்முறைகள் ஆரம்பித்துள்ளன.

இதனை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் எனவும் காத்திரமான சமாதான சூழ்நிலை உருவாக்கி அரசியல் பாதுகாப்பு மனிதாபிமானம் மற்றும் பொருளாதார விடயங்களை உள்ளடக்கிய ஓர் சுமுக நிலை உருவாக்க வேண்டும் எனவும், கோபி அனான் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலியர்களின் குண்டு வெடிப்பை அடுத்து காசா நிலப்பரப்பை இஸ்ரேலியத் துருப்புக்கள் ஆக்கிரமித்துள்ளன. இதனால் பதற்றநிலை உருவாகும் சூழ்நிலை உருவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-07)

# ஜவரிகோஸ்ட் நாட்டில் இராணுவம் சதிப்புரட்சி
## முறியடிக்கப்பட்டதாகத் தகவல்

(ஜவகோன்)

ஜவரிகோஸ்ட் நாட்டு அரசாங்கத்திற்கு எதிராக இராணுவத்தினர் சதிப்புரட்சி செய்துள்ளார்கள்.

இச் சம்பவத்தை அடுத்து அந் நாட்டின் ஜனாதிபதி நேற்று முன் தினம் மாலை 6மணிதொடக்கம் எதிர் வரும் 24ஆம் திகதி செவ்வாய்க கிழமை வரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில் அந்நாட்டு ஜனாதிபதி யொரன்ஸ் பிரான்ஸ் நாட்டிடம் இராணுவ உதவி கோரியுள்ளதாகவும் பிரான்சும் ஜவகோரின் நாடும் பலவிடயங்களில் கூட்டு இணைந்து செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தினரின் சதிப் புரட்சி முறியடிக்கப்பட்டு விட்டதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (க-07)

## ஈராக்கிற்கு எதிராக
# அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்

(வோஷிங்டன்)

ஈராக் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என செனட் சபையிலுள்ள ஜனநாயகத் தலைவர் டொம்டாஸல் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுஸைனின் உள் நோக்கம் குறித்து சந்தேகமாக இருப்பினும் ஐக்கிய நாடுகள் சபையே ஈராக் விடயம் குறித்து முடிவெடுக்க வேண்டும் என்றும்,

ஒருதலையான முடிவை ஆதரிக்கவில்லை எனவும் சர்வதேச சமூகத்தின் முயற்சிகளை ஆதரிபபதாகவும் குறிப்பட்டுள்ளார். (க-03)

# காவிரி நதி நீரை உடன் திறந்துவிட வேண்டும்

(புதுடில்லி)

கர்நாடகாவின் காவிரி நதிநீர் தேக்கத்தில் இருந்து உடனடியாக நீரை திறந்துவிட வேண்டும் என இந்தியாவின் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வலியுறுத்தியுள்ளார்.

காவிரி நதி நீரை நிறுத்தியது தொடர்பாக கடும் கண்டனம் தெரிவித்த பிரதமர் புதுடில்லியில் மத்திய நீர்வளதுறை அமைச்சர் அப்துல் ஹரன் ஹேசியுடன் இப்பிரச் சினை தொடர்பாக ஆலோசனை நடத்திய பிறகு இக்கருத்தை வெளியிட்டார்.

இதனிடையே உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி காவிரியில் இருந்து திறந்து விடப்பட்ட நீரை கர்நாடக அரசு நிறுத்தியது தொடர்பாக தமிழ் நாட்டின் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை நேற்றையதினம் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்குத் தாக்குதல் செய்வது தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழகத்தின் வழக்கறிஞர் வேணுகோபால் காவிரி நடுவர்மன்றம், காவிரி நதி நீர் ஆணையம், மற்றும் உச்ச நீதி மன்றம் ஆகியவற்றின் உத்தரவையும் மீறி காவிரியில் நீரைத் தடை செய்தமை தொடர்பாகவே தாக்கல் செய்த இவ்வழக்கு எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை நீதி மன்ற விசாரணைக்கு எடுத்து கொளளப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஏற்பட்ட மோசமான நிலையை அடுத்து தமிழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியுள்ளது. (க-07)

## அமெரிக்க வெள்ளைமாளிகைமீது
# தாக்குதல் நடாத்த சூடான்வாசி முயற்சி
## புலனாய்வு வட்டாரங்கள் தகவல்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மீது தாக்குதல் நடத்துவதற்கு விமானம் ஒன்றை கடத்தத்திட்டமிட்டதாக கருதப்படும் சூடான் நாட்டு பிரஜை ஒருவரை அமெரிக்காவின் புலனாய்வு பிரிவினர் தேடிவருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் விமானிப் பயிற்சியை முடித்துக் கொண்ட இந்த நபர் ஒசாமாபின்லேடன் தலைமையிலான அல்கெய்டா அமைப்புடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகவும் அமெரிக்காவின் புலனாய்வு துறையினர் செய்தி வெளியிட்டுள்ளனர்.

குறித்த நபர் தற்பொழுது கனடா நாட்டில் அஞ்ஞாத வாசம் செய்வதாகவும் அங்கிருந்து தாக்குதல் நடவடிக்கைக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற பணியில் உள்ளார் எனவும் அமெரிக்காவின் புலனாய்வு பிரிவின் கொள்கை திட்டமிடல் பகுதியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க-07)

## உலக தரிசனம்

### அமெ. நிலைப்பாட்டில் மாற்றம்

(டோக்கியோ)

வடகொரியா தொடர்பான அமெரிக்கா கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஜப்பானிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் நடத்திய தொலைபேசிக் கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தை சூசகமாகத் தெரிவித்ததாக ஜப்பானிய பிரதமர் மேலும் கூறியுள்ளார். (த)

### ஒன்பது பேர் பலி 20 பேர் காயம்

(புதுடில்லி)

கர்நாடக பிரதான வீதி ஒன்றில கோலாப் நகர் அருகில் நேற்று முன்தினம் இரவு நடந்த விபத்து ஒன்றில் 09பேர் பலியாகினர். 20பேர் காயமடைந்தனர்.

மேலும் இதுபற்றி தெரியவருவதாவது; பயணம் செய்து கொண்டிருந்த பஸ் லாரியுடன் மோதியதாலேயே இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமுற்ற 20 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### பதில் தாக்குதல் நடாத்த வேண்டும்

(டெல் அவிவ்)

இஸ்ரேல் மீது ஈராக் தாக்குதல் நடத்தினால் பதில் தாக்குதல் நடத்த வேண்டும் என இஸ்ரேலியர்கள் கோருகின்றனர்.

இஸ்ரேல் மீது ஈராக் தாக்குதல் நடத்துமானால் ஈராக் மீது அணு ஆயுதங்கள் பயன்படுத்தப் பட வேண்டும் என இஸ்ரேலியர் விரும்புவதாக அங்கு நடந்த கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

### ஹாமாஸ் உரிமை கோரியது

(டெல் அவிவ்)

இஸ்ரேலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலிற்கு பலஸ்தீன ஹாமாஸ் இயக்கம் உரிமை கோரியுள்ளது இதே வேளை தலைநகர் ரெல் அவிவில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் 5பேர் கொல்லப் பட்டதுடன் 50பேர் காயம் அடைநதது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆயுதப் பரிசோதனைக் குழு விரைவில் ஈராக் விஜயம்

(பக்தாத்)

ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர்களின் விசேட குழு எதிர்வரும் அக்டோபர் 15ஆம் திகதி ஈராக்கிற்கு விஜயம் செய்ய உள்ளது.

ஈராக்கிற்கும் அமெரிக்காவிற்கும இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை அதிகரித்திருக்கும் இந்த வேளையில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தனது நாட்டில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இல்லையெனவும் ஆயுதப் பரிசோதனை எந்தவித நிபந்தனையும் இன்றி மேற்கொள்ள அனுமதிக்கப்படும் என தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த வேளையில் அமெரிக்கா போலிக் காரணங்களை முன்வைத்துத் தாக்குதல் நடத்துவதற்கு முயற்சி செய்து வருவதாகவும் இதனை ஒரு போதும் ஏற்க முடியாது என ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்தார். (க-07)

# பலஸ்தீன அரசு அமைக்க ஐரோப்பிய ஒன்றியம் திட்டம்

(ஜெருசலேம்)

பலஸ்தீன அரசை 2005ஆம் ஆண்டளவில் அமைப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் திட்டத்தை சர்வதேச இராஜதந்திர கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

பலஸ்தீன அரசைத் தோற்றுவிப்பதற்கான மூன்று கட்ட ஆலோசனைகள் இத்திட்டத்தில்அடங்கியுள்ளன.

இத்திட்டம் தொடர்பாக பலஸ்தீனுடனும் இஸ்ரேலுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

பலஸ்தீன பாதுகாப்புப் பிரிவினை மறுசீரமைப்பு, இருவருடங்களுக்கு முன்னர் உள்ள நிலைகளுக்கு இஸ்ரேல் திரும்புதல் என்பன முதற்கட்ட திட்டமாகும்

இஸ்ரேலிய - பலஸ்தீன பாதுகாப்பு உடன்படிக்கையும் முதற் கட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் கட்டம் கட்டமாக அமுலாக்கப்படுவதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் கூறியுள்ளனர். (க-03)



மைக்கா செயின்ட் கேட்ரைனில் பெய்த கனத்த மழையினால் வீதிகளில் நீர் நிரம்பியுள்ளது. இதனால் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் கார்கள் செல்ல முடியாமல் நடு வழியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

# யேமனில் அமெரிக்கா தலையீடு
## அல்கெய்டாவிற்கு எதிராகவாம்

(வோஷிங்டன்)

யேமனில் அல்கெய்டா இயக்கதிற்கு எதிராக மறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா தயாராகி வருகின்றது.

அமெரிக்க இராணுவமும், மத்திய புலனாய்வுப் பணியகமும் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தரையிலும் நீரிலும் பாவிக்கப்படக் கூடிய கப்பல் யேமன் கரையோரப் பகுதியில் நிலைகொண்டுள்ள தாகவும், அருகிலுள்ள டிஜியூட்டி எனும் நாட்டில உள்ள பிரெஞ்சு இராணுவத்தளத்தில் அமெரிக்கத் துருப்பினரும் பல ஹெலிகளும் தயார் நிலையில இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-03)

# மதவாதிகள் தாக்குதல் 11பேர் பலியாகினர்

(பொஹாரா)

பொலம்பியாவில் மதத் தீவிரவாதிகள் பதினொரு பொதுமக்களைக் கடத்திச்சென்று சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

இதனை அடுத்துக் கொலம்பிய இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையினால் பதின் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், இரண்டு பொதுமக்களையும் இராணுவததினர் காப்பாற்றியுள்ளார்கள்.

இராணுவத்தினரின் இத்தகைய அதிரடி நடவடிக்கையை பலரும் பாராட்டி உள்ளனர். (க-07)



தாய்லாந்து நாட்டின் ருவா நகரில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. அங்குள்ள வீடு மற்றும் கோயில்களிலும் வெள்ளம் புகுந்துவிட்டது. புத்த கோயில் ஒன்றில் பாதி மூழ்கிய நிலையில் இருக்கும் சிலையின் அருகில் இளைஞர் ஒருவர்.

# பலஸ்தீன அதிபரின் கட்டடத்தொகுதி இஸ்ரேலிய டாங்கிகளால் முற்றுகை

(டெல் அவிவ்)

இஸ்ரேலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத்தின் கட்டடத் தொகுதி இஸ்ரேலிய படைகளின் யுத்த டாங்கிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன ஜனாதிபதியைக் கைது செய்வதற்கும் மற்றும் பலஸ்தீன போராளிகளைச் சரணடையச் செய்வதற்காகவுமே இந்நடவடிக்கை மேற் கொண்டதென இஸ்ரேலின் படைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் இருபது போராளிகள் இஸ்ரேலிய படையினரிடம் சரண்அடைந்திருப்பது குறிப்பிடத் தக்க ஓர் விடயமாகும்.

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத தின் வாசஸ்தலம் முன்பும் ஒரு தடவை இஸ்ரேலிய டாங்கிப் படைகளால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டதும் பின்னர் அம் முற்றுகை வாபஸ் பெறப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (க - 07)

# இன்று ஒரு தகவல்

## மூன்றும் முக்கனிகள்

குன்று தோறாடும் குமரன் அழகன் அடியார் துயர்களையும் கருணை வள்ளல். அருணகிரி நாதப் பெருமானின் சந்தத்தமிழ்ப்பாடலகளில் !கொஞ்சித்தவழ்ந்த சேயோன்:வில்லேந்தி வினை தீர்க்கும் வெற்றிவேல் முருகன் அவனைப் பாடிப்பரவாதார் இல்லை. அவனது அழகியதிருக்கோலத்திலே லயித்த பக்தர்களின் அனுபவங்கள் மெய்சிலிர்க்க வைப்பவை. பேராசிரியர்அமரர் ஆர்.ராமசேஷன் சிறந்த முருக பக்தர். அவன் கருணை மழையில் காலத்தைக் கடத்திய வர். முழுதும் அழகியகுமரன்என்ற நூலை எழுதியிருக்கிறார். சேக்கிழார்தாசன் என்ற ராமசோழனின் சகோதரர், வலையப்பட்டி ரா.கிருஷ்ணன் என்பவரும் இந்தப் பக்திப்பணியில் பெரும் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

முருகனின் தொன்மை, தத்துவம், கந்தனின் திருக்கோலங்கள், முருகவழிபாடு, என்ற தலைப்புக்களில் இலக்கியச் செறிவுடன், பக்திமணம் கமழ இந்தநூலைஎழுதியிருக்கிறார்கள். கந்தபுராணம், திருப்புகழ், கந்தர் கலி வெண்பா, குமாரதந்திரம், ஸ்ரீதத்வ நிதிபோன்ற குமரன் சீர்மைபேசும் நூல்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்கள் ஆங்காங்கு மாணிக்கங்களாகஒளிர்கின்றன. பலதலங்களிலுள்ள அபூர்வ முருகன் படிமங்களின் புகைப்படக் கோவை சிறப்பாக உள்ளது.

முருகனின் பன்னிருதோள்ள் தமிழின் பன்னிரண்டு உயிர்எழுத்துக்கள். பதினெட்டுக்கண்களும் !பதினெட்டு மெய்யெழுத்துக்கள்.!ஆறுதிருமுகங்களும் !இனஎழுத்துக்கள் ஆறாகும்;ஞானசுடராகவிளங்கும் அவனது வேல் ஆய்த எழுத்தாகதமிழாகவேவிளங்குகிறான் முருகன்:இது ஒரு புராணப்பாடல் மேற்கோள், ஆறுபடைவீடுகளைப் பற்றிய விளக்கமும் இணைந்த இந்த நூல் முருக அன்பர்களுக்கு உகந்தது. குழந்தைகள் மனம் பண்படவும் உதவும் முப்பத்திரண்டு வித மூர்த்தி பேதங்களையும், அந்த அந்த மூர்த்திகளை வணங்குவதால் உண்டாகும் பலன்களையும் விளக்கியிருக்கிறார்கள்.

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் முருகபக்தர். அருளாளர். ஆறுவயதிலேயே அழகனின் அருள் பெற்ற அவதாரபுருஷர் இந்த மகானுடைய வாழ்க்கையில் முருகப்பெருமான் நிகழ்த்தியுள்ள அற்புதங்கள் பல சதாரண- திருநெல்வேலிச் சைவ வேளாள மரபில் தோன்றிய குழந்தையை இலட்சக் கணக்கில பாடவைத்த குமரனின் கருணையை என்னென்பது இப்போதும் இந்த அருளாளரின் பாடல்கள் ஐம்பதினாயிரம் கிடைக்கின்றன.

தமிழுக்கே சிறந்த மரபான சித்திரககவி பாடிப்பரவிய கவிஞர் பெருமான்கள் சிலர். நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கை யாழ்வார்போன்ற அருளாளர்கள் வரிசையில் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ள சித்திரக் கவிகள் சிறந்தவை. கூற்றிருக்கை, மாலை மாற்று, சதுரங்க பந்தம் ஆகிய சித்திரக் கவிகளை இயற்றியிருக்கிறார். சூரியன் சிவன், அம்பிகை, திருமால். விநாயர். முருகன் என்ற ஆறு சமயக் கடவுளர் மீதும் தனித்தனியே கூற்றிருக்கைப்பாடல் பாடியிருப்பது புதுமையிலும் புதுமை. இந்த அருளாளரின் கவித்திறத்தை, பக்திப் பெருக்கை எல்லா மக்களும் படித்துப் பயன் பெறவேண்டுமென்று- மூலம், உரை, பட விளக்கங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பெயரர் தவத்திரு முருக தாஸ் சுவாமிகள் உரையெழுதியிருக்கிறார். இந்தச் சித்திரக்கவிகளின் அருமை பெருமைகளைத் தமிழ்ப் பேராசிரியர் ஸி.ஜகந்நாதாசாரியர், தம் அணிந்துரையில் மிக அழகாக, எளிமையாக விளக்கியிருக்கிறார். ஏழு கூற்றிருக்கைப் பாடல்களும் அவை அமைந்த சித்திரங்களும், சித்திரக்கவிகள் நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

திருப்புகழ்ப் பாடல்களில் அறுபத்தாறை சிறு நூலச, திருப்புகழ் அறுபத்தாறு, என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு பாடலுக்கும் பொழிப்புரையும் உள்ளது. இந்த மூன்று நூல்களும் கவிச் சுவையும், பக்தி மணமும் தெவிட்டாமல் தருபவை. இம் மூன்று முக்கனிகளே!

-ராதேயன்

### போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை எதிர்வரும் 28ந் திகதி நடத்தப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சு வார்த்தையின் போது பரீட்சை ஆணையாளர் மஹிந்தவிஜயசிறி இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

(உ)

### அரசியல் அலுவலகம்

(மந்திகை)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் தமிழீழவிடுதலைப் புலிகளின் விசேட அரசியல் துறை அலுவலகம் ஒன்று கடந்த புதன்கிழமை திறக்கப் பட்டுள்ளது.

விழாக்காலங்களில்அரசியல் நடவடிக்ககைகளைமேற்கொள்வதற்கு வசதியாக இவ் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(உ-23)

### வாக்கு மூலங்கள் கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் நவீன சந்தைப்பகுதியில் வைத்து வர்த்தகர் ஒருவரை பொலிஸார் தாக்கியசம்பவம் தொடர்பான விசாரணை அண்மையில் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் இடம் பெற்றது.

இந்த விசாரணையில் பிரஸ்தாபபொலிஸார் தனதுவாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை எதிர்வரும்26 ஆம் திகதிவியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக விசாரணை அதிகாரி றுவான் சந்திரசேகரா தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பொலிஸார் மற்றும் வர்த்தகர் சாட்சிகள் ஆகியோரின் வாக்கு மூலங்கள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(உ-6

# கடந்த ஐந்து மாதத்தில் மட்டும் 855 நோயாளர் கொழும்பிற்கு இலவசமாக அனுப்பி வைப்பு

### சர்வதேச செஞ்சிலுவை யாழ்.கிளை தெரிவிப்பு

(தென்மராட்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதகாலத்தில் அதன் ஜய கோல்ட் கப்பல் மூலம் 855 நோயாளிகளையும் 644 உதவியாளர்களையும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு இலவசமாக அழைத்துச் சென்று மருத்துவ சிகிச்சை பெற உதவியுள்ளது.

அத்துடன் ஏ 9 பாதை திறந்தது முதல்53நோயாளர்களையும் உதவியாளர்களையும் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறு !சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அரையாண்டுச் செயல்பாடுகள் பற்றிய தொகுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலைக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கும் இக்காலப்பகுதியில் ஜயகோல்ட் கப்பல் மூலம் 226. 9 மெற்றிக்தொன் நிறையுள்ள மருந்துப்பொருட்களை வரவழைத்துள்ளது'

காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் நடத்தப்பட்ட 'சிற்றி ஒவ்றிங்கோ கப்பலில் 33 தடவைகள் மேற்கொண்ட பயணத்தில் பயணித்த 22 ஆயிரத்து 800 பயணிகளுக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற இன முரண்பாடு தொடர்பாக தமது குடும்ப உறவுகளை இழந்த நிலையில் வாழ்ந்த 32 பேரைத் திரும்பவும் தமது குடும்பங்களுடன் இணையச் செய்துள்ளது.

அத்துடன்62 செஞ்சிலுவைச் சங்க செய்திகளைப் பெற்று அவற்றுள் 55 செய்திகளை இன முரண்பாடுகள் காரணமாகப் பிரிந்திருந்த குடும்பங்கள் மத்தியில் விநியோகம் செய்துள்ளது.

இணுவிலில் தற்போது இயங்கி வரும் செயற்கைக் கால் உற்பத்திசெய்யும்தொழிலகத்திற்கு வேண்டிய உபகரணங்களையும் பொருட்களையும் வழங்கியதன் காரணமாக 84கீழ்பாதங்களையும்இரண்டு மேல்பாதங்களையும்உற்பத்தி செய்வதற்கு வழிசமைத்துள்ளது.

அத்துடன் 388.9 மெற்றிக்தொன் நிறையுள்ள தபால்களையும்14.6மெற்றிக்தொண் நிறையுள்ள பரீட்சைகளுக்கான காகிதாதிகளையும் ஜய சோல்ட் கப்பல் மூலம் திருமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இது தவிர யாழ்ப்பாணத்தில் மனிதநேயப்பணியில் ஈடுபட்டிருந்த 353 பேர்களை ஜயசோல்ட் கப்பல் மூலம் யாழ்ப்பாணம். - திருமலை, திருமலை யாழ்ப்பாணத்துக்கு பயணிக்கஉதவியுள்ளது.

மேலும் 803 இராணுவ, கடற்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சர்வதேச மனிதநேய சட்டம் பற்றியும் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைகள், பணிகள் பற்றி 14 விரிவுரைகள் மூலமும் 30 விரிவுரைகள் மூலம் 2901 பொது மக்களுக்கும் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பெண்ணிய சங்கங்களின்பிரதிநிதிகளுக்கு பெண்களும் யுத்தமும் எனும் தலைப்பிலான கருத்தரங்குஒன்றினை யாழ்ப்பாணக் கிளைஇலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து நடாத்தியுள்ளது.

இவை தவிர தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் நலன்களைப் பேணும் பொருட்டு 19 தடவைகள் தடுப்பு முகாம்களுக்கு விஜயம் செய்து தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்வையிட்டுள்ளது.

இவ்வாறு இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-77)

## இரராசி பலன்

21-9-2002
(புரட்டாதி 5, சனி)
பூரணை மு.இ 7.49 வரை
பூரட்டாதி மாலை 6 16வரை
இராகுகாலம் 9.02- 10.32
நல்லநேரம் 3.02- 4.32
பூரணை விரதம்,
புரட்டாதிச் சனி

**மேடம்**
மனச்சஞ்சலம், பணவிரயம், காரிய தாமதம், உறவினர் சந்திப்பு.

**இடபம்**
தெய்வ நம்பிக்கை, முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி.

**மிதுனம்**
நல்ல சம்பவம், கடுமையான உழைப்பு, கீழ்ப்படிவு, காரியம் கைகூடும்.

**கடகம்**
புதியதிட்டமிடல், அச்சமான நிலை, சகோதரர் உதவி, பிரயாணம்.

**சிங்கம்**
வீண்தொல்லை, உடல் உபாதை, காரிய தடங்கல், போசன சுகம்.

**கன்னி**
நண்பர்கள் சந்திப்பு, கலந்துரையாடல், வாகன சுகம், முயற்சி கைகூடும்.

**துலாம்**
சந்தோசமான சம்பவம், செய் தொழில் விருத்தி, நோய் குணமடைதல், காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
அபகீர்த்தி, சொத்துக்களால் கவலை, காரிய இடையூறு, உறவினர் வருகை.

**தனுசு**
ரோகபயம், கல்வியில் ஆர்வம், பகைவர் நேசம், முயற்சி தாமதம்.

**மகரம்**
கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, தனவரவு.

**கும்பம்**
மதிப்புக் குறைவு, தனவிரயம், தொழில்கஷ்டம், முயற்சி தாமதம்.

**மீனம்**
தெய்வசிந்தை, ஜனவசியம், முயற்சி கைகூடும, சயனசுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களுக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்திலே தற்பொழுது முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து அவர்கள் மீள வசிப்பதற்கான வசதிகளை யாழ் மாநகரசபை வழங்க வேண்டுமென ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர் குல் முகமட் கமால்தீன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாநகர சபையில் நகரமுதல்வர் செ. கந்தையன் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் பிரேரணை கொண்டுவரும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-19)

## பனம்விதை நாட்டல் விரைவில் நடைமுறையில்

### த. பொ. மே நிறுவனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தின் ஆதார சக்தியாக விளங்கும் பயன் தருமரங்களில் ஒன்றான பனம்விதை நாட்டல் வேலைத்திட்டம் மிகவிரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக தமிழீழ பொருண்மியமேம்பாட்டுநிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக அந்நிறுவனம் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் சாதகமான காலநிலையைப் பயன்படுத்தி தமிழீழத்தின் பல பாகங்களிலும் இந்தத்தேசிய உற்பத்தி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த மக்கள் அமைப்புக்களும் திடசங்கற்பம் பூண்டுள்ளன.

கடந்தகால யுத்தநிலை காரணமாக அழிக்கப்பட்ட, அழிந்துபோன இந்த இயற்கைச் செல்வத்தை மீண்டும் கட்டிக்காத்து மேம்படுத்த வேண்டிய சமூகப்பொறுப்பு இன்று நம் எல்லோரையும் சார்ந்து நிற்கின்றது.

இதனை கருத்தில்கொண்டு பெருமளவில் பனம் விதை நடுகையினை எமது மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளவுள்ளோம். இதற்கான பனம்விதைகளும் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, பனம்விதைஉற்பத்தியாளர்கள் உங்கள் பகுதிகளிலுள்ள பனைஅபிவிருத்திச் சபை, கமநலசேவை நிலையம் பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களுடன் தொடர்புகொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (க)

## உதை பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப4.00மணிக்கு சென்றோக்ஸ் 'பி' வி. க எதிர் பொற்பதி 'பி'வி.க பி.ப5. 15 மணிக்குபாடும் மீன்'எ' வி.க, எதிர்பொற்பதி 'பி' வி.க ஆகியன பாஷையூர் சென்அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (க-3)

## தாய்லாந்தில் நடைபெற்றுவரும் பேச்சில்

# அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்

### அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இருதசாப்தங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில், தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதை அமெரிக்கா பாராட்டியுள்ளது என கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடித்தல், இருதரப்பினரும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல், இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு ஒன்றை காணமுயற்சி மேற்கொள்ளல் என்பவற்றிலே இரு தரப்பினரும் அர்ப்பணிப்புடன் பணிபுரிகிறார்கள்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளகுடியமர்த்தல், வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் அபிவிருத்திநடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டு அமைப்புக்களை உருவாக்குவதுகுறித்து தாய்லாந்தில் நடைபெற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தையில் இருதரப்பினரும்எடுத்த தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இத்தகைய முயற்சிகளுக்கு அமெரிக்கா பல வழிகளிலும் உதவிபுரியும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

தாய்லந்துப் பேச்சுவார்த்தையில் நடுநிலையாளனாக செயற்படும் நோர்வே அரசு வெளியிட்ட அறிக்கையினை அமெரிக்கா அவதானமாக ஆராய்ந்துள்ளது.

இத்தகைய சமாதான நடவடிக்கைகள் மூலம், ஜனநாயகம்,

மனிதஉரிமைகளுக்கு மதிப்பளித்தல், இலங்கையின் பிரதேச தன்னாதிக்கத்தை தொடர்ந்தும்நிலைநாட்டுதல் என்பனவற்றின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை காணமுடியும் என நம்புவதாகவும்,

நாட்டுமக்கள் அனைவரும் விரும்பக்கூடிய தீர்வொன்றை காண்பதற்கு இது வொரு பொருத்தமான தருணம் ஆகும்.

அதேவேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் அனுசரணை வழங்கிய நோர்வே அரசாங்கத்துக்கும், சமாதானப்பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இடம் கொடுத்து உதவியதாய்லாந்து அரசாங்கத்துக்கும் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் தூதரகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-08)

## ஐரோப்பிய சமூகம் மேலும்

# 36 கோடி ரூபா நிதியுதவியை இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது

(கொழும்பு)

ஐரோப்பிய சமூகம் மனிதாபிமான அடிப்படையில் மேலும் 36 கோடி ரூபா நிதியுதவியை இலங்கைக்கு வழங்க முன் வந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் உலக உணவு விவசாய ஸ்தாபனம் உட்பட 5 நிறுவனங்கள் இணைந்தே இந்த மேலதிக நிதிஉதவியை வழங்கவுள்ளன.

நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்புச் செய்வதற்கும் அப் பிரதேச மக்களை மீளக் குடியமர்த்துவதற்குமே இந் நிதி பயன்படுத்தப்படவுள்ளது

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்பு செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐரோப்பியசமூகத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் மூன்றாவது நிதியுதவி இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் உலகின் பல்வேறு அமைப்புகளும் நாடுகளும் நிதியுதவி வழங்க முன் வந்திருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (க)8-

### கட்டட திறப்பு விழா

(மந்திகை)

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலய கட்டட திறப்புவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் எஸ் சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசத் தலைவர் சி.வி.கே சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (க-23)

### நூல்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தலவாக்கொல்லை நகர சபைத்தலைவர் திரு.எம்.எம் நிமலசேனா நேற்றுக் காலை 10-30மணியளவில் யாழ். பொதுசன நூலகத்தில்வைத்து யாழ் மாநகரசபை நகரபிதா செ.கந்தையனிடம் யாழ். பொதுசன நூலகத்திற்கு தேவையான ஒரு தொகை நூலை அன்பளிப்பு செய்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தலவாக் கொல்லை நகரசபைத்தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் இந்த நூல் கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில்யாழ். மாநகர சபை ஆணையாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதில் தலவாக்கொல்லைநகர சபைத் தலைவர் எம்.எம். நிமலசேனா உதவித்தலைவர் எஸ்.பாரதிதாசன் செயலாளர் ஏ.பி.கருணாவதி ஆகியோர் உரையாற்றினர். (க-06)

### ஒப்புட்ஸ்மனை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர் சமூகம் எதிர் நோக்கும்பல்வேறு பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வினை காண்பதற்காக ஒப்புட்ஸ்மன் ஒருவரை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்பதவிக்கு முன்னாள் பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. எம் .ஆர். பி அமரக்கோனை நியமிப்பதற்கு அனுமதி கோரி அமைச்சரவைக்கு சுற்றுநிருபம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இத் தீர்மானத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளார் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

### கடன் திட்டம் ஆரம்பம்

(மந்திகை)

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் நகைகளை அடகு வைத்து பணம் பெறும் கடன் திட்டம் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம்நகை அடகு வைத்தவர்களுக்கு வங்கியினால் குடை ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (க-23)

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிபிரதேசஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதிசாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிரதேச செயலர் செ ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிபிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது குறித்து இக் கூட்டத்தில்ஆராயப்படும் என நம்பகரமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (க-77)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம், முரண்பாடுகளைத் தீர்த்தலும சமாதானத்தின் தேவையை வலியுறுத்தலும் என்ற விடயத்தில கலந்துரையாடல் ஒன்றைபருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில எதிர்வரும் 24 ம் திகதி நடத்துவதற்குமுன்வந்துள்ளது

இக கலந்துரையாடலில் ஹாட்லிக் கல்லூரி மெதடிஸ் கல்லூரி உயர்தர மாணவர்கள கலந்து கொள்ளவுள்ளார்கள். இக் கலந்துரையாடல் சமாதானத்தில மாணவர்கள்தற்போது காட்டிவரும் ஆர்வத்தைத் தெளிவுபடுத்தி சமாதானத்தின் இன்றைய தேவையை வலியுறுத்துவதாக அமையும்.

இக கலந்துரையாடலில் யாழ்ப்பாணக்கல்லூரிப்பணிப்பாளர் அ.குமாரவேல், சட்டத்தரணி பவானி சற்குணராஜ, மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர்திருமதி சரோஜா சிவச்சந்திரன், ஜனநாயகஉரிமைகளைப்பாதுகாப்பதற்கான இயக்கப் பிரமுகர் அ சிவகுருநாதன் உட்பட பலர் கலந்து கொள்வர். (க)

### ஸ்தாபகர் நினைவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 22 ஆம் திகதி 9 00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற உள்ளன.

பாடசாலை அதிபர் இ குணநாதன் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் சோ.விஸ்வலிங்கம், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ. சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்வர்.

அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் நினைவுப் பேருரையை நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு· தியாகராசக்குருக்கள் (நீர்வைமணி) நிகழ்த்தவுள்ளார். (க)

### இலவச மருத்துவ முகாம்

(நவக்கிரி)

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைச் சங்கம் வடக்கு-கிழக்கு சுகாதார மேம்பாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் இரண்டு நாட்கள் கொண்ட இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்றும் நாளையும் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை மூளாயில் நடத்தப்பட உள்ளது.

இவ் இரண்டுநாள் வைத்திய முகாமில கொழும்பு மெடிகுவிக் நிறுவனம் தனது சகல ஆய்வு கூட பரிசோதனைகளையும் இலவசமாக மேற்கொள்ளஉள்ளமைஇங்குகுறிப்பிடத்தக்கது. (க-233)

### சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில்மருத்துவமுகாம் ஒன்றினை அண்மையில்நடத்தியது.

இம் முகாமில் மொத்தம் 150பேருக்குகண்பரிசோதனை பற்பரிசோதனை நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்முகாமில் வைத்தியக் கலாநிதி எஸ். எஸ். அருளானந்தம் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்ஆகியோர் பரிசோதனைகளை மேற் கொண்டனர். (க-77)

### தியாகி திலீபனின் நினைவுகள்



### தனித்துப் படை யெதிர்த்த பெருமகன்

விடுதலை வேள்வியில் முளைத்த
அகிம்சைத் தீப்பிழம்பு -இவன்
போராடும் பூமியில் குதித்த
அன்புப் பேராறு

தேசத்தினை அடக்கவந்தோரின்
வேசங்களை வெளிக்காட்டியவன் -இவன்
வெறி கொண்ட பகைவர் முன் அகிம்சை
நெறி காத்து நின்றவன்;

ஈகம் கண்டு செஞ்சூரியன் தன்
தேகம் சுருக்கிக் கொண்டான் -இவன்
நோக்கம் கண்டு இமயம்
நடுநடுங்கிக் கொண்டது.

தனித்துப் படையெதிர்த்த பெருமகன்
தளர்ந்த போதிலும் கிறங்காத் திருமகன்-இவன்
மறைந்து போகவில்லை யென்றும்
நிறைந்து வாழ்கிறான் தமிழர் இதயத்தே.

**நெற்கொழு தாசன்**
நெற்கொழு (வல்வெட்டித்துறை)

# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய
# தீர்த்தோற்சவ சிறப்பு மலர் - 2002

## அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பிரதான குருமார்களின் அருளாசிகள்

மெய்யன்பர்களே!

அவனருளாலே அவன் தாள் வணங்கி,

''குணத்துக்கும் கர்மத்திற்கும் ஏற்ப நான்கு வருணங்களை நான் படைத்தேன். அதற்குக் கர்த்தா எனினும் என்னை சுவிகாரியென்றும் அகர்த்தா என்றும் அறிக!!''

சத்வ குணமுடையோன் பிராமணன். ரஜோகுணம் அதிகமும் சிறிது சத்தவமும் உள்ளவன் க்ஷத்திரியன். ராஜோகுணம் அதிகமும் சத்வகுணம் சிறிதும் தமோகுணமும் சேர்ந்தே உள்ளவன் வைசியன்.

பிராமணன் வெண்மை, க்ஷத்திரியன் சிவப்பு, வைசியன் மஞ்சள், சூத்திரன் கறுப்பு. இந்த நிறங்கள் யாவும் உடலின் வெளித் தோற்றத்தில் தோன்றுபவையல்ல. உடலில் ஐரோப்பியர் அனைவரும் வெள்ளையர். அவர்கள் எல்லோரும் பிராமணர்கள் அல்லர். இந்தியரான ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் போன்றோர் கறுப்பர். ஸ்தூல சரீரத்தின் நிறம் மனிதனது இயல்பை விளக்காது. இவ்வாறு ஞானகர்மஸ்ய யோகத்தில் 13வது ஸ்லோகமாக பகவத்கீதைமூலம் பகவானருளியுள்ளார்.

எனவே ஆன்மாக்களாகிய நாம் அனைவரும் இனமத மொழி பேதங்களின்றி எல்லோரும் மாயவனின் பிள்ளைகளென எண்ணி, அவனது உபதேசங்களைக் கருத்தில் கொண்டு வல்லிபுரச் சுடராழி மாயவனது பாதாரவிந்தங்களைப் பணிந்தேத்திப் பலன்கள் பலபெறுவோம். இங்கே கூடியிருக்கும் அனைத்து ஜீவராசி களுக்கும், இங்கு வரமுடியாதவர்களுக்கும், உலகோரனை வருக்கும் வல்லிபுரரேசன் பேரருள் புரிவான். மாயவனின் நல்லருளாசிகளைக் கூறிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

ஹரி ஓம் நமோ நாராயணாயநம

| | |
|---|---|
| ஸ்ரீஆழ்வார் பீடம் | பிரதான சிவாச்சார்யர்கள் |
| ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் | பிரம்மஸ்ரீ ச.கு.புருஷோத்தமக்குரு, |
| துன்னாலை வடக்கு, புலோலி. | பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு. |



## நினையென்றும் நினைந்திடவே அருள் செய்வாயே!

*கலையார்ந்த தோரணங்கள் மாலை தூக்கிக்*
*கவின் பெறவே யமைத்தவரும் பந்தற் கீழே*
*அலை கடலில் நீராடும் அமலே னேயுன்*
*அற்புதமாய்க் காட்சிதனை அன்பாய்க்காண*
*தலையாய துன்பதுய ரங்கள் நீங்கித்*
*தளைத்திடவே தாவிவா அருளைச் செய்து*
*நிலை பெறவே எமைவைக்கும் நெடிய மாலே*
*நினையென்றும் நினைத்திடவே அருள் செய்வாய்*

மு. தணிகாசலம்
கற்கோவளம்

## அறங்காவலர் சபையின் வாழ்த்து

''எல்லா உயிர்களிடத்திலும் நான் இருக்கின்றேன்''

என்ற பகவத்கீதையின் வாக்குக்கிணங்க இலங்கை வாழ் சகல இனமக்களும் ஐக்கியத்தையும் சாந்தியையும் பெறவேண்டும் என நாம் பிரார்த்திக்கின்றோம். இன்று சனிக்கிழமை (21.09.2002) வங்கக் கடலிலே தீர்த்தம் ஆடும் எம் பெருமான் அனைவருக்கும் ஆனந்தத்தினை வழங்குவாராக.

| | |
|---|---|
| திரு. இ. அன்னலிங்கம் | துன்னாலை வடக்கு |
| தலைவர் | புலோலி |
| அறங்காவலர் சபை | 19.09.2002 |

## கடலோடு கலந்த கண்ணன்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் கடந்த 2002-09-06ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பானது மாக விளங்குவது சமுத்திர தீர்த்தத் திருவிழாவாகும். இத்திருவிழாவிற்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடைபெறுகிறது. இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தம் ஆடுவதற்கு செல்வார். பக்தகோடிகள் சூழ்ந்திருக்க மாயவனின் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் மாயவா, வைகுந்தா, கண்ணா, நாராயணா எனக் கோசங்களை எழுப்பியவாறு காவிச் செல்வார்கள். கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும்போது மாயவனின் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். இக்கண்கொள்ளாக் காட்சியை காண்பதற்கு மக்கள் சமுத்திரம் திரண்டிருக்கும்.

சமுத்திர தீர்த்தத்திற்கும் வல்லிபுரக் கோவில் தோன்றி யமைக்கும் சரித்திர வரலாறு கூறுவதாவது: கற்கோவளம் கடலில் மீன்பிடித்தவர்களின் வலைத்தொடரில் மீன் ஒன்று பிரவேசித்து வலைகளைப் பிய்த்து கோலாகலமாக துள்ளி விளையாடியது. இந்நிகழ்ச்சியை ஆனந்தத்தோடு மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். மீன்பிடித்தவர்கள் ஆத்திர முற்று மீனைப்பிடிக்க முயன்றனர். ஆனால் அம்மீன் பிடிகொடாது எல்லோரும் ஆச்சரியப்படும்படியாக ஒரு பெண்ணின் மடியில் வந்து வீழ்ந்தது. அப்பெண் 'லவல்லி' என்னும் பிரசித்தப் பெயருடையவராவார். அப்பெண்ணின் மடியில் இருந்த மீன் பிள்ளைபோல் தோன்றியது. லவல்லியும் சந்தோஷமடைந்து பிரியத்துடன் அப்பிள்ளையை அணைத்த படி ஒரு மரநிழலில் அமர்ந்து அப்பிள்ளையை சயனிக்கச் செய்தாள். பின் ஒரு பல்லக்கில் வைத்து லவல்லி எனும் வல்லிநாச்சியுடன் அப்பிள்ளையை தாங்கிச் சென்றனர். களைப்படைந்த அவர்கள் களைப்பாறுவதற்காக ஒரு இடத் தில் பல்லக்கை இறக்கினார்கள். மீண்டும் செல்வதற்கு பல்லக்கை தூக்க முடியவில்லை. அவர்கள் பல்லக்கை ஆச்சரியத்துடன் பார்த்தபோது குழந்தை சக்கரமாகக் காட்சியளித்தது. எல்லோரும் மாயவனின் சக்கரத்தை வணங் கினார்கள். அன்று தொட்டு இன்றுவரை இந்நிகழ்வைக் குறிக்கும் முகமாக சமுத்திர தீர்த்தம் கற்கோவளம் மக்களால் நடாத்தப்படுகிறது.

ச. கேசவானந்தன்
பரிபாலனசபை
உறுப்பினரும்
இ.மி.சபை ஊழியரும்


இன்று வங்கக் கடலில் நீராடி வரும் வல்லிபுர மாயவனின் அருள்வேண்டி நிற்கின்றோம்!



நாவலர் புத்தகசாலை

சிலையடி மந்திகை, புலோலி.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரின் அருள் வேண்டி நிற்கின்றோம்!

லவ்லி

லவ்லி கூல்பார்
லவ்லி றெக்கோடிங் சென்றர்
லவ்லி ''பஸ்'' ஆசன பதிவகம்

பிரதான வீதி, நெல்லியடி.

சரித்திர மாயவன் இன்று சமுத்திரத்தில் நீராடி வருகிறான்!

அழகிய தங்க நகைகள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்



கணேசா நகைமாளிகை

பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.

இன்று வங்கக் கடலில் நீராடி வரும் மாயவனின் அருள்வேண்டி நிற்கின்றோம்!

தமிழ் பாரம்பரியத்தின் கலைமிளிரும் அற்புத படைப்புக்கள்



வைஷ்ணவி நகைப்பூங்கா

பிரதான வீதி, நெல்லியடி.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரின் அருள்வேண்டி நிற்கின்றோம்!

கோபாலா

T. P. No: 070 - 212372
021 - 3277
070 - 212693
Fax: 070 - 212372

தொலைத் தொடர்பு நிலையம்

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி.

ஸ்ரீ வல்லிபுர மாயவனின் அருள் வேண்டி நிற்கின்றோம்!

தமிழ் பூங்கா மலர் ஓவ் செற் பதிப்பகம்



பிரதான வீதி, நெல்லியடி.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரின் அருள்பெற வேண்டுகின்றோம்!

ஜெயபால் தையல் நிலையம்

சகல விதமான ஆடைகளையும் குறித்த தவணையில் சிறந்தமுறையில் தைத்துப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.

பிரதான வீதி, பருத்தித்துறை.


சிறப்பு மலர்:
த.ஜெயரூபன்



தொகுப்பு:
ச.யாதவானந்தன்


மச்சாவதாரியாக வந்து வல்லியின் மடியில் குழந்தையாகிய கண்ணன் இன்று வங்கக் கடலில் நீராடி வருகிறான்!

வாழ்த்துவோர்

ஸ்ரீ கிருஷ்ண ஆழ்வார் பஜனை மண்டபம்

பெரியாழ்வார் ஆச்சிரமம், கற்கோவளம்.

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவரும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் பெற வேண்டுகின்றோம்!

கட்டைவேலி நெல்லியடி

ப.நோ.கூ.சங்கம்

கரவெட்டி



தலைவரும், பணியாளர்களும்.

# இந்திர விழாவினை நினைவுறுத்தும் வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்த விழா

யாழ் குடா நாட்டில் பல இடங்களிலும் விஷ்ணு ஆலயங்கள் உள கிழக்கே வலலிபுரக் குறிச்சியிலும் மேற்கே பொன்னாலையிலும் யாழ்நகர மத்தியிலும் உளள விஷ்ணு ஆலயங்கள பிரசித்த மானவை. இவைகளுள் கிழக்கே வங்கக்கடற் கரையிலே அமைந்துள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மிகவும்பெரிதான அளவை உடையது. விசாலமான மூன்று வீதிகளை உடையது மூனறாவது வீதியில்அடியார்கள் தங்கக் கூடிய பாரிய விருட்சங்கள் காணப் படுகின்றன. இரண்டுதீர்த்தங்கள் நடைபெறும் விசேடமுடைய ஆலயம் இது ஒன்றேயாம்.

முன்பு ஒருகாலத்தில் கற்கோவளம். என்ற கிராமத்தில் கிழக்கே வங்கக் கடலில் அதிசய மச்சம் ஒன்று கடலிலே துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்தது. கற்கோவளத்தில் வாழும கடலோடிகள் அதனைபபிடிக்க முயன்றனர். அவர்களின் வலைகளைக் கிழித்து அந்த மச்சம் உயரப் பாய்ந்தது. சிலதினங்கள் இந்த அதிசயம் நடந்தது இதனைக் கேளவிப்பட்டு மககள் கடற்கரையில் திரண்டனர். வராத்துப்பளை என்ற ஊரில்வாழ்ந்த லவல்லி என்ற வல்லிநாச்சியார் நாகசாபம் நீங்கத் தவமிருந்து வந்தார். அவரும் கடற்கரைக்கு வந்து நாராயணனைப்பூசித்தபடிகரையில் இருந்தார். அந்த அதிசய மச்சம் அம்மையாரின் மடியில் வீழ்ந்து குழந்தையாக மாறியது குழந்தையை அடியார்கள் பல்லக்கில் வைத்துத் தூக்கிச் சென்றனர். நெடுந்தூரம் வந்த மக்கள் பல்லக்கை மரநிழலில் வைத்து விட்டு இளைப்பாறினர். பின் பல்லக்கைத் தூக்க முயன்றனர் பல்லக்கினை அசைக்க முடியவில்லை. தூக்கமுடியாத பாரமாக இருந்தது அந்த இடத்தில் அந்தக் குழந்தை மறைந்து விட்டது பக்தர்கள் அதிசயம் அடைந்தனர்

அப்போது அந்தணர் ஒருவர் அவ்விடம் வந்து ஒரு சக்கரத்தைத் ஒருபக்தரிடம் கொடுத்துஅதனை வைத்துவழிபடும் படி கூறிச் சென்றார். அதிசயக் குழந்தை மறைந்த இடத்தில் சக்கரத்தை வைத்து மக்கள் வழிபட்டனர்.

கவிஞர்

கந்த முருகேசதாசனார்

அந்தச் சக்கரமே கருவறையில் இன்று மூலமூர்த்தியாக வழிபடப்படுகிறது அம்மூர்த்தியை சக்கரத்தாழ்வார், வல்லிபுர ஆழ்வார் என வழங்கிவருகின்றனர். யாழ். நல்லூரில் வேல், விழாக்காலங்களில் வலம் வருவதுபோல, வல்லிபுர ஆழ்வார் கோவிலில் சக்கரமே வலம்வருகின்றதைக் காணலாம்.

அதிசய மச்சம் தோன்றிய இடமே சமுத்திர தீர்த்தம் நடைபெறும் இடமாகும். அவ்விடம் கோவிலுக்கு வடமேற்கே மூன்று கல்தூரத்தில் அமைந்துளளது.

சமுத்திர தீர்த்தத்தன்று வல்லிபுர சுவாமி நாகவாகனத்தில் அமர்ந்து அவ்விடம் செல்கிறார்-மணல்பிரதேச மாகையால் வாகனங்களை அடியார்கள் தோளில் சுமந்தே செல்வர். பஞ்சு மூடையைச் சுமப்பதுபோல் மிக இலகுவாகச் சுமந்து விரைவில் தீர்த்தக் கரையை அடைவர். அவ்விடம் பல மணற்குன்றுகளை உடையது. குன்றுகளின் மேல் அடம்பன் கொடிபடர்ந்து காணப் படுவதால் மரகதமலையாகக் காட்சியளிக்கும் தீர்த்தக்கரையில்ஜனசமுத்திரம் களைகட்டியிருக்கும் சுவாமி கடலிலே வள்ளத்தில் சென்று தீர்த்த மாடுவார். அந்தநேரம் மலை போன்ற திரைகள் அடித்துக் கொண்டிருக்கும்.

அந்தக் காட்சியைக்காணும் போது இந்திர விழாவின் நிகழ்ச்சிகள் மக்கள் மனதில் தோன்றும். ●

## மின்சார சுருதிப்பெட்டி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய தர்ம கர்த்தாவும் பொறியியலாளருமான இராசா வாமதேவன் அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தியிடம் மின்சார சுருதிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

நல்லூர் ஆலய உற்சவ காலத்தின் போது வருடா வருடம் நடத்தும் அகில இலங்கை திருமுறை மன்றத்தின் பண்ணிசை நிகழ்வை ஒட்டியே இவ் அன்பளிப்பு வழங்கப்பட்டது. (க)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 14 ஆம்திகதியும் மறு நாள் 15 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (க)

### நாட்டிற்கு

னையின புகழ் எங்கும் பரவியது. அலைஅலையாய் பக்தர் கூட்டம ஆலயத்திற்கு வந்து சென்றது.

### வேறுபல சேவைகள்

இதனபின்னர் றெஜிஸ் இராஜநாயகம் அடிகள் சாட்டி மாதா கோயில் பரிசகராக இருந்தபோது குருக்கள் இல்லத் தேடு கூடிய தங்குமிடம் கட்டபபட்டது. அன்னையின் சொரூபத்தை வழிபட ஒழுங்கான பாதை அமைககபபட்டது. சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய நினைவு மலரும் வெளியிடபபட்டது.

1990 காலப்பகுதியில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கையால் இடம்பெயர்ந்த கரம்பன், சுருவில் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்கள மாதா ஆலயத்தில் தங்கினர். அபபோது இராணுவத்துக்கு சொந்தமான வானூர்தி (ஹெலிகொப்டர்) ஒன்று ஆலயத்தின்மேல் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டு பல உயிர்களைப் பறித்தது. 1990–1995 வரை அப்பகுதி மக்கள அங்கு வசிப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்கவில்லை. எனவே அன்னையினுடைய ஆலயமுய பராமரிப்பு அற்றுப்போனது.

### இராணுவ நடவடிக்கைகளின் பின் மீண்டும் வழிபாடு

1995 ஆம்பின்னா மக்கள் மீண்டும் அன்னையின் பதிக்கு செல்ல அனுமதிககப்பட்டனர். இதன்பின்னர் திருவிழாககள் சிறப்பாக நடைபெற்றன. திருநாள் திருப்பலிகளை ஒப்புக்கொடுக்க மேடைஒன்று அமைக்கப்பட்டது.

2000ம் ஆண்டு யாழ். ஆயரினால் பலன்களைதத ரும் யாத்திரைத் தலமாகசாட்டி சிந்தாத்திரை மாதா கோவில் பிரகடனம் செய்யப்பட்டது. சென்றஆண்டு 22ம் திகதி திருவிழா சிறப்பாக கொண்டாடபபட்டது.

தற்போது மலர்ந்திருக்கும் இந்த சமாதான சூழ்நிலையில் அன்னையின் பரிந்துரை வேண்டி திருநாள்திருப்பலி இன்று (21-ம் திகதி) கொண்டாடப்பட இருக்கின்றது. இந்த இனிய நாளிலே அன்னை இந்தநாட்டிற்கு நீதியோடு கூடிய சமாதானத்தை தர வேண்டுமென்று அனைவரும் பிரார்த்திப்போம். ●

# அரசு- புலிகள் சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் பங்களிப்பை தவிர்க்க முடியாது

## இலங்கை இராஜதந்திரி கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடச் செய்துள்ளதன் மூலம் அனுசரணையாளர் என்ற நிலையிலிருந்து நோர்வே சமாதான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்காளி என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது.

இவ்வாறு இலங்கை ராஜதந்திரி யொருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமாதான முயற்சிகளை கையாளும் விடயத்தில் நோர்வேக்கு குறிப்பிடத்தக்க அனுபவங்கள் உண்டு. அது தவிர இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை உறுதி செய்வதை விட நோர்வேக்கு வேறு தேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நோக்கங்கள் கிடையாது எனவும் அந்த இராஜதந்திரி சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச அளவில் நோர்வே தன்னை சமாதானத்தை ஏற்படுத்தும் நாடு என அடையாளப்படுத்த விரும்புகின்றது என ஆய்வாளர் அல்வ் மேள்டென் ஜெர்வ் கூறியிருப்பதையும்,

மத்தியகிழக்கு, ஆப்கானிஸ்தான், கிழக்குதிமோர், சோமாலியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் நோர்வே சமாதான முயற்சிகளை மேற்கொண்டதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைவிட நடுவுநிலைமைத் தன்மை கூடிய நாடென்பதனாலேயே நோர்வேதேர்ந்தெடுக்கப்பட்டது. நோர்வே கடும் சவால்களை ஆரம்பத்தில் சந்தித்த போதிலும் தனது மிகத் திறமையான இராஜதந்திரிகளான எரிக் சொல்ஹெய்ம், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் போன்றவர்களை பயன்படுத்தி சமாதான முயற்சிகளை பேச்சுவார்த்தைமேசை வரை கொண்டு சென்று உள்ளது. 1999 இல் முதன முதலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே நோர்வேயின் உதவியை நாடினார்.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில நோர்வேயின் விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட எரிக் சொல்ஹெய்ம் அதே வருடம் நவம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைசந்தித்திருக்கிறார்.

2001 டிசம்பரில் புதிய பிரதமராகதேர்ந்தெடுக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நோர்வேயைசமாதானமுயற்சிகளில் உதவுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு குறித்து கொழும்பில் கடும் கருத்து வேறுபாடுகளும் காணப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### யுத்தத்தின்

அல்லது அவனுக்கு உணர்ச்சி வெறியை ஊட்டி விடுவதாலோ நடக்கப்போவது ஏதுமில்லை மாறாக, அவனை அறிவு ரீதியாக நிதானத்துடன் சிந்திக்கத் தூண்டினால் அதுவே ஒரு படைப்பின் உண்மை வெற்றியாக அமையும். தர்மசிறி அறிவு ரீதியாக எம்மைச் சிந்திக்கத் தூண்டுவதில் வெற்றிபெறுகிறார்.

அடிப்படையில் துன்பியலை மையப்பொருளாக கொண்டதே இந்நாடகம். அவலச்சத்தமும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உள்ள காட்சிகளாகவே இந்த நாடகம் இருக்கப்போகிறது என்ற எண்ணமே இந்த நாடகத்தை பார்வையிடுவதற்கு முன்பு எனக்கிருந்தது ஆனால் நாடகத்தை பார்த்த பின் அவ்வெண்ணம் மாறிவிட்டது. மலை உச்சியிலிருந்து கொட்டும் அருவியொன்று அமைதியாக ஆற்றை நோக்கி பாய்வது போல மிக இயல்பாகவும் ஆழமாகவும் வேகமாகவும் மனதை அசைத்துச் சென்றது.

### மொழி தடை போடவில்லை

முற்றிலும் சிங்கள மொழியில் உருவாக்கப்பட்ட இந்த நாடகத்தை சிங்களம் முற்றிலும் தெரியாத தமிழ்ப்பார்வையாளனான நான் எப்படி ரசிப்பேன் என்ற எண்ணத்துடன் அரங்கினுள் நுழைந்தேன்.

நாடகம் முடிந்த பொழுது மொழி புரியாமை பெரிய தடையாகத்தோன்றவில்லை. நாடகம் அனைத்துமே புரிந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. யுத்தம் தரும் அழிவை மனித முகத்தில் அசைவைத் தவிர வேறெந்த ஊடகத்தால் சிறப்பாக சொல்ல முடியும்.

இந்த வகையில் பார்க்கும் பொழுது தர்மசிறி பண்டார நாயகக இந்த நாடகத்தைமிக நேர்த்தியாக நெறிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

நாடகம் முடிந்த பின்பு நடைபெற்ற கலந்துரையாடலில் கலைஞர்களும் பார்வையாளர்களும பங்கு கொண்டனர். ''வரும் வழியில் சாவகச்சேரியில் ட்ரோஜன் நகரைக் கண்டேன்'' என்ற தர்மசிறி பண்டாரநாயக்கா பார்வையாளர்களிடமிருந்தும் மனம் திறந்த கருத்துக்களை வேண்டினார்.

இளகிய மனங்களுடன் பார்வையாளர்களும் கலைஞர்களும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். சிங்கள மொழியில் யுத்தத்தின் கொடுமை பற்றி ஆழமாகக் கூறும் இந் நாடகம் சிங்கள மக்கள் மத்தியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்டிருப்பதால் நிச்சயமாக ஒரு தாக்கத்தை இது ஏற்படுத்தியே இருக்கும்.

அத்தாக்கம் இந்த நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களின் முயற்சி, ஆர்வம், உழைப்பு ஆகியனவற்றில் தெரிந்தது யுத்தம் இல்லாத உலகொன்றைக்காணும் ஆவல் அக்கலைஞர்களிடமும் எம்மிடமும் தோன்றவைத்தது இந் நாடகம்.

பொருளாதார சீர் திருத்தம் குறித்து

## அமெரிக்க முதலீட்டாளர் மத்தியில் பிரதமர் விளக்கம்

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான தனது அரசு திட்டமிட்டிருக்கும் பொருளாதார சீர் திருத்தங்கள் பற்றி அமெரிக்க முதலீட்டாளர்கள் மத்தியில் பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா விளககிக் கூறியுள்ளார்.

நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் அமெரிக்க முதலீட்டாளர்களை சந்தித்த போதே பிரதமர் விளக்கிக் கூறியுள்ளார்.

தனது அரசு திட்டமிட்டிருக்கும் பொருளாதார சீர் திருத்தங்களில் உற்பத்தியை அதிகரிப்பது, முதலீடுகளில் உள்ள தடைகளை நீக்குவது மற்றும் தனியார் துறைக்கானவர்த்தக கேந்திரமாகஇலங்கையை மாற்றியமைப்பதுமே தனது அரசின் திருத்தங்களாகும்;

நாடு 5 பொருளாதார வலயங்களாக பிரிக்கப்படுவதுடன், ஒவ்வொருவலயத்துக்கும் முகாமைத்துவ சபைகள் அமைக்கப்படும்.

முதலீட்டுச் சட்டம் திருத்தப்படுவதுடன் தற்போது நடைமுறையிலுள்ள செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தைநீக்கி, செலாவணிமுகாமைத்துவ சட்டம் கொண்டு வரப்படவுள்ளதுஎனவும்அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன செய்து கொள்ளப்பட்டசுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தை போல பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனும் உடன்பாடுகள் ஏற்படும எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க-08)

முடிவும் இடையூறும்
முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்

குறள்

## வலம்புரி

### மீள்குடியேற்றம் அவசியம்

அரசும்-விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள இந்நிலையில், சமாதானப் பேச்சு தொடர்பாக வடக்குக் கிழக்குத் தமிழ்மக்களின் உணர்வுநிலை என்ன என்பது குறித்து இதுவரை எந்தவித கருத்துக்கணிப்பும் எடுக்கப்படவில்லை.

தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றபோது தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஏதோ தாய்லாந்துப் பிரச்சினை குறித்து பேச்சுக்கள் நடப்பது போல் தமது உணர்வை வெளிக்காட்டினர்.

இருபது வருடகால யுத்தத்திற்கு முடிவுகட்டுவதற்காகப் பேச்சுக்கள் நடைபெறுகிறதென்ற உணர்வுநிலை மக்களிடம் இல்லாமை பெரும் வேதனைக்குரியதுடன் அதில் நியாயமும் இருக்கவே செய்கிறது.

நீண்டகால யுத்தம், இடம்பெயர்வு, உயிரிழப்பு, சொத்தழிவு, இவற்றின் விளைவாக கூட்டுக்குடும்ப வாழ்வில் ஏற்பட்ட பிரிவுகள், ஒழுக்கப்பிறழ்வுகள் போன்றவை மக்கள்மனங்களில் தீராதமன வடுவை ஏற்படுத்திவிட்டது. சுருங்கக் கூறின் வடக்குக் கிழக்கில் 70வீதமான மக்கள் உளரீதியான தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். இதனை யாழ். போதனா வைத்தியசாலையின் உள மருத்துவப்பிரிவின் தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

போர் நடைபெறும் நாடுகளில் மக்கள் உள நெருக்கடிக்கு ஆளாவதும் அதன் தாக்கம் சந்ததிகளுக்குக் கடத்தப்படுவதும், உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில்; யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களின் தேவைப்பாடுகள்- மீள்குடியமர்வு- உறவுகளின் பிரிவுகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து சகல தரப்பினரும் கவனம் செலுத்துவது அவசிய மாகும்.

மக்கள் ஒருபுறம்-பேச்சுவார்த்தை மறுபுறம் என்ற நிலைப்பாடு ஏற்படுமாயின் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்குமென்பதை உணர்ந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

# யுத்தத்தின் கொடுமைபற்றி ஆழமாகக் கூறும்

# "ட்ரோஜனத்துப் பெண்கள்" சிங்கள நாடகம்

திறனாய்வுக் களம்

**இ. கிருஷ்ணகுமார்**

யுத்தத்தில் எவருமே வெற்றி பெறுவதில்லையுத்தம் மனித குலத்தையும் நாகரிகத்தையும் அழிப்பதில் மட்டுமே வெற்றி பெறுகிறது. இருந்த போதிலும் யுத்தம் காலம் காலமாகவே நடைபெற்று வருகிறது அதேபோலயுத்தஎதிர்ப்பும் காலம் காலமாக தொடர்ந்து வருகிறது. பண்டைய கிரேக்க மாயிருந்தாலென்னஇன்றைய இலங்கையாக இருந்தாலென்ன யுத்தம் அழிவைத்த விரவேறொன்றையும் தரவில்லை.

### ட்ரோஜனத்துப் பெண்கள்

யூரிபிடிசால் கி.மு 415 இல் கிரேக்க மொழிகளில் எழுதப்பட்ட 'ட்ரோஜனத்துப்பெண்கள்'' என்ற நாடகம் ட்ரோஜன் யுத்தம் உருவாக்கியசமூக அவலங்களைஅன்று உலகுக்குக் கூறியது அக்கதையின் கருவை மையமாகக் கொண்டு அக்கிரேக்க நாடகத்தை இன்றைய இலங்கையின் யதார்த்தத்திற்குப்பொருந்தும் வகையில் சிங்கள மொழியில் மிகச்சிறந்த நாடகமாக உருவாக்கி, தென் இலங்கையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றிய நெறியாளர் தர்மசிறி பண்டாரநாயக்க அந்நாடகத்தை யாழ்ப்பாணத்து தமிழ் மக்களும் பார்க்கும் வண்ணம் அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் மேடையேற்றினார். யுத்தத்தின் கொடுமையை பல பரிமாணங்களில் சொல்லும் இந்நாடகம்,இன, மத உணர்வுகளை கடந்து மனித மனங்களுக்குள் உறைந்து கிடக்கும் அடிப்படை மனித உணர்வை மனிதத்துவத்தை தட்டியெழுப்புவதில் வெற்றி பெற்றுள்ளது.

சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த ட்ரோஜன் யுத்தத்தில் ட்ரோஜன் நாட்டு ஆண்கள் அனைவரும் கிரேக்க படையினரால் கொல்லப்பட, அடிமைகள் ஆக்கப்பட்ட ட்ரோஜன் பெண்கள் விலங்கினால் பிணைக்கப்படு, அரங்குக்கு கொண்டு வரப்படுவதுடன், நாடகம் ஆரம்பமாகிறது. Flash back உத்தி மூலம் நாடகத்தின் சம்பவங்கள் கோர்க்கப்பட்டு முடிவில் பெண்கள் அனைவரும் விலங்கிடப்பட்ட அடிமைகளாக இழுத்துச் செல்லப்படுவதுடன் நாடகம் நிறைவுறுகிறது.

### மனதில் பதிந்தவை

ஒரு கலைப்படைப்பு என்ற வகையில் இந்த நாடகத்தின் சிறப்பம்சங்களை குறிப்பிட்டே ஆகவேண்டும்.சிறந்த ஒலி, ஒளி, பாடல்கள், ஆடல் மூலம் நேர்த்தியாக உருவாக்கப்பட்டுள்ள இப்படைப்பில் பாத்திரங்களின் நடிப்பு மிகச் சிறப்பானது.

ஒத்திசைவுடன் கூடிய நடனம், சிறப்பான குரலோசையுடன் கூடிய அங்க அசைவுகளும் முக அசைவுகளும் காட்சிக்கு பொருந்தும் வகையிலான நடிப்பும் என்னை வியப்பில் ஆழ்த்தின.

எல்லாப்பாத்திரங்களின் நடிப்பும் மிகச் சிறப்பாக இருந்த போதிலும் ட்ரோஜனின் முதிய அரசியான ஹெக்கபேயின் பாத்திரத்தை ஏற்று நடித்த புகழ் பூத்த நடிகை அனோஜா வீரசிங்கவின் நடிப்பு வியக்கும் படியாக இருந்தது அவரின் அங்க அசைவுகளும், காட்சிகளுக்குப் பொருந்தும் வண்ணம் அவர் வெளிப்படுத்திய முக வேறுபாடுகளும் மனதில் பதிந்த அம்சங்களாகும். ஹெக்கபே பாத்திரத்திற்குரிய இரக்கம், கருணை, கையறுநிலை அதே வேளை அரசிக்குரிய கர்வம் போன்ற குணாம்சங்கள் எல்லாம் அவரது சிறந்த நடிப்பால் வெளிக்கொணரப்பட்டன. எல்லாவற்றையும் இழந்து எதிரிகளின் அடிமையாக மிகுதி நாட்களாகக் கழிக்கப் போகும் நிலையில், அவள் தோள் மீது அடிமை விலங்கு பூட்டப்படும் போது ஒரு அரசிக்கே உரிய கர்வத்தோடும் இறுமாப்போடும் அவ்விலங்கை தோளில் சுமக்கும் இறுதிக்காட்சியில் அனோஜாவின் நடிப்பு அற்புதம்.

### நெறியாள்கை

தர்மசிறி பண்டாரநாயக்காவின் நெறியாள்கை காட்சிக்கு காட்சி வியக்க வைக்கிறது. மேடையில் முதலில் காட்டப்படும் காட்சி அசையாமல் நிற்கும் துப்பாக்கிகளை ஏந்தியஇலங்கைஇராணுவம்தான் கிரேக்க நாடகத்தில் இலங்கை இராணுவமா?சிறிது நேரம் பார்வையாளர் அதிர்ச்சிக்குள்ளாகி பின்பு சமநிலைக்கு கொண்டு வருகிறார் நெறியாளர் காலங்கள் மாறினாலும் அரசுகள் வேறுபட்டாலும் நாடுகள் வேறுபட்டாலும், யுத்தத்தை நடத்துபவர்கள் எக்காலத்திலும், எந்த நாட்டிலும் ஒரே தன்மையுடையவர்கள் என்பதனை பிரக்டின் நாடக உத்தி மூலம் சமகால சூழ்நிலைக்கு பொருந்தும் வகையில் நெறிப்படுத்தியுள்ளார் தர்மசிறி.

தாய் என்றோமெக்கியிடமிருந்தும் பேர்த்தியான ஹெக்கபோயிடமிருந்தும் பலவந்தமாகபிடுங்கப்பட்டு வீசப்பட்ட பாலகனான இளவரசன் எஸ்தியனெக்ஸின் உயிரற்ற உடல் இறுதிக்கிரியைகளுக்காக ஹெக்கபேயிடம் கையளிக்கப்படும் காட்சியில் ட்ரோஜன் பெண்கள் ஒவ்வொருவராக இரத்தம் தோய்ந்த அங்கிகளை கொண்டுவந்து புலம்பிக்கொண்டிருக்கும் ஹெக்கபேயிடம் கொடுக்க அவள் புலம்பியபடியே அவற்றை ஒவ்வொன்றாக இளவரசனின் உடல் மீது போர்க்கும் காட்சியில் தர்மசிறியின் கலைத்துவம் தெரிகிறது.

### சிந்திக்கத் தூண்டுதல்

பார்வையாளனை உணர்ச்சியில் உறைய வைப்பதாலோ

(8 -ம் பக்கம் பார்க்க)

# நாட்டிற்கு நீதியோடான சமாதானம் ஏற்பட

# சாட்டி சிந்தாத்திரை மாதா அருள்புரிவார்

**எப். எக்ஸ். சுதர்ஸன்**

கொழும்புத்துறை

லைடன் தீவிலுள்ளவேலணையில்காணப்படும் சிற்றூர்தான் ''சாட்டி'' இங்கேதான் அனைவருக்கும் அருள்பாலிக்க எளிமையே உருவான சாட்டி மாதா என்று அழைக்கப்படும் சிந்தாத்திரை மாதா ஆலயம் காணப்படுகின்றது. அழகும் அமைதியும் நிறைந்த கடற்கரைதான் சாட்டிகடற்கரை.

### போர்த்துக்கேயரின் மாதா சொரூபம்

16ம் நூற்றாண்டில்போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியபோது சாட்டியிலே தமது கோட்டையினை கட்டி அங்கே வசித்து வந்தனர். தமது பயணத்தின்போது தம்மைபாதுகாக்கஎப்போதும் ஒரு சொரூபத்தை தமது பிரார்த்தனை அறையில் வைத்து வேண்டுதல்செய்து வந்தனர். அதுதான் இன்றைய சாட்டி மாதா ஆகும். தொடர்ந்து யாழ்ப்பாணப் பகுதி ஒல்லாந்த படைகளால் கைப்பற்றப்பட்டபோது சாட்டியிலிருந்த போர்த்துக்கேயருடைய கோட்டையும் அவர்களால் தகர்த்தெறியப்பட்டது.இக்கோட்டை தகர்க்கப்பட்டு ஏறக் குறைய இருநூறு ஆண்டுகளின் பின்னர், இக் கோட்டை துப்புரவு செய்யப்பட்டபோது அந்த இடிபாடுகளின் மத்தியிலிருந்து எதுவித சிறிய காயமுமின்றி சிந்தாத்திரை மாதா சொரூபம் வெளியே எடுக்கப்பட்டது. அச் சொரூபத்தை அப்பகுதி மக்கள் மிகவும் பக்தி பூர்வமாக ஒரு ஓலைக் கொட்டகையில் வைத்து வழிபாடுகள் செய்தனர்.

இவர்கள் ஆலயத்தை நிறுவி வருகின்ற காலகட்டத்தில் இவர்களுடன் இருந்த ''மூத்தாவி'' என்பவர் ஒரு உயர்ந்ததடி (கம்பம்) ஒன்றை நாட்டுகை செய்து அதன் முனையிலே மணி ஒன்றினைக்கட்டி அங்கேயிருந்த மக்கள் அனைவரையும் ஒன்று கூட்டி அந்த ஆலயத்திலே வழிபாட்டினை நடத்தி வந்தார்.

### கல்லினாலான ஆலயம்

இதன் பின்னர் மாதாவினுடைய பக்தர்கள் இவ்வோலைக்குடிசைக் கோயிலை சிறந்த ஒரு கோயிலாக கட்ட வேண்டும் என்று திட்டமிட்டனர். இதன் விளைவாக (வரலாற்றுச்சான்றுகளின் படி) 1789 ம் ஆண்டு ஒரு கல்லினாலே நிறுவப்பட்டசிறிய ஆலயம் நிறுவப்பட்டது. ஆனால் துரதிஷ்ட வசமாக 1886 ம் ஆண்டு இக்கோயில் தீப்பிடித்தது இதன் பின்னர் இவ்வாலயம் அந்தோனி அடிகளாரின் காலத்தில் (1928) ஆலயமீள் புனரமைப்புவேலைகள் நடைபெறத் தொடங்கின. பக்தர்களின் நல்லுள்ளங்களினால் ஆலயம் மென்மேலும் புதுப்பொலிவுபெறத்தொடங்கியது பல மக்கள் தாமாகவேமுன் வந்து அன்பளிப்புகளை அள்ளி வழங்கினார்கள். இதன்பின்னர் 1946 இல் ஊர்காவற்துறை கரம்பனைச் சேர்ந்த பஸ்ரியன் என்பவருடையஅன்பளிப்பில் ஆலயம்வளர்ச்சி பெறத் தொடங்கியது. வரலாற்றுச்சான்றுகளின் படிஇவருடைய அன்பளிப்பில் தான் இன்று காணப்படுகின்ற திறந்து வெளிமண்டபம் கட்டப்பட்டது. 1974 ல் அன்

(8-ம் பக்கம் பார்க்க)

### தினசரி தியானம்

### வைராக்கிய செல்வம்

காமம், பேராசை, அகம்பாவம், விருப்பங்கள் பற்றுக்கள் முதலானவற்றை ஒழித்து, மனத்தைத் தூய்மைப் படுத்தாவிட்டால், பிரம்மனைஅடைவது மிகவும் கஷ்டம். எல்லாப் பற்றுகளிலிருந்தும் முடிந்த அளவு நீங்கள் விடுபட்டு, தியானத்தில் அமர்ந்தால் மாசற்ற பேரின்பமான பிரம்மனை அடையமுடியும். புலன்இன்ப நாட்டத்திலிருந்து விடுபடுங்கள். வைராக்கியமாகிய செல்வத்தை அடையுங்கள். பற்றுக்களை ஒழித்துவிட்டு, தத்துவஞானம் பெறத்தொடங்கும். மனத்தின் அமைதியாகிய அமிர்தத்தைப் பெற்று மகிழ்ச்சி அடையுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## 13வயதுப் பிரிவுக்கான துடுப்பாட்ட இறுதிப்போட்டி

யாழ் மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட யாழ் பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுக்குடபட்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று யாழ் பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடை பெறும்.

இவ்வாட்டத்தில் அரையிறுதி ஆட்டங்களில் தெரிவான கொக்குவில் இந்துக்கல்லூரியும், யாழ் இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன.

இந்நிகழ்விற்கு யாழ் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் த.தேவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இன்று காலை 8.30மணிக்கு இரு கல்லூரி அதிபர்களும் தமது கல்லூரிக் கொடிகளை ஏற்றி வீரர்களை அறிமுகம் செய்துவைப்பதனைத் தொடர்ந்து ஆட்டம் ஆரம்பமாகும்.இவ்விறுதிப் போட்டிக்கு பனம் பொருள் அபிவிருத்திச் சபையினர் அனுசரணை வழங்கியுள்ளனர்.

## முஸ்லிம்களுக்கான...

கமாகவும் ஆராயப்பட்டு இணக்கப் பாட்டுக்கு வரமுடிந்தது.

யுத்த அனர்த்தங்களினால் இடம பெயர்ந்த மக்களை மீளக் குடியேறுவது மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாகவும் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது.

முஸலிம் மக்களது பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை மேசையில் ஆராயும் போது அப் பிரச்சினைகள் குறித்து நிதானமாக அணுக வேண்டியுள்ளது என்று எடுத்துக கூறியுள்ளதுடன் பேச்சுவார்த்தை கட்டம கட்டமாக நடைபெற்றால் இது குறித்து தீர்வு காணக்கூடியதாக இருக்கும்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் தனித்துப் பேசவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் வெகு விரைவில் அவர்களை வன்னியில் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்ககூடிய வகையிலான தீர்வு திட்டம் ஒன்றை வடிவமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட சகல முஸ்லிம் கட்சித் தலைவர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இத் தீர்வுத் திட்டத்தை தாய்லாந்தில் நடைபெறவுள்ள இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்படவிருப்பதாகவும் அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## மீள் குடியமர்வுக்கு...

இது விடயம் தொடர்பாக அன்ரன் பாலசிங்கத்திற்கும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இப் பேச்சுவார்த்தையில் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் சமாதானம் திரும்புவதற்கும் தாய்லாந்து தன்னாலான உதவிகளை வழங்க உறுதி பூண்டுள்ளது என அவர கூறினார்.

இதேவேளை மோப்ப நாய்கள் மூலம் ஆப்கானிஸ்தானில் நிலக்கண்ணிகளை அகற்றுவதற்கு தாய்லாந்து அரசாங்கம் உதவி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த)

## பத்திரிகையாளர் தெல்லியூர் நடராசா காலமானார்

மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான தமிழ்மணி தெல்லியூர் நடராசா நேற்று முன்தினம் காலமானாா. வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் கடமையாற்றிய அவர். ''தமிழ்மணி'' என்ற புனை பெயரில் பல்வேறு கட்டுரைகளையும் ஆக்கங்களையும் எழுதியுள்ளார்.

யாழ் மாநகரசபையின் சைவ சமய விவகாரக்குழுவினால் வெளியிடப்பட்டு வரும் நல்லைக் குமரன் மலரின் ஆரம்பகால பதிப்பாசிரியராக கடமையாற்றிய நடராசா சோதிடத்தில் துறைபோனவராக விளங்கினார். அவரின் இறுதிக்கிரியைகள் கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றது. (ந)

## எதிர்க்கட்சி...

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா அமைச்சர் மிலிந்த மொறகொட ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் தற்சமயம் அமெரிக்காவில் தங்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## மஹரகமவில் டாக்டர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர் ஒருவர் மஹரகமவில் வைத்து இனந்தெரியாத தோரால் நேற்றிரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் வேலை செய்து விட்டு வீடு திரும்பும் வழியிலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டதா தெரிவிக்கப்படுகிறது. (

## கிழக்கிலிருந்து...

டும் என்று புலிகள் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தனர்.

இக் கோரிக்கையின் அடிப்படையிலும், தாயலாந்தில் அரசுக்கும விடுதலைப் புலிகளுக்கும் இடையே முதற்சுற்று பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளதாலும, தரைமார்க்கமாகப் பயணத்துக்கு அனுமதி வழங்கப் படுவதாக ஒஸ்ரின் மேலும் தெரிவித்துள்ளார். (இ-8)


**பனையைத் தறியாதீர் பயனைக் குறையாதீர்**

**அனுமதி இன்றிப் பனை தறிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.**

எமது ஆதார சக்தியாக விளங்கும் தேசிய வளமான பனை மரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும், இவ்வளப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் இவ்வளம் தொடர்பான நலன் விரும்பும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பனை தறிப்பதற்கான ஒரு நடைமுறையை 01.09.2002ல் இருந்து நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஆகவே, அத்தியாவசிய தேவைகளுக்கு பனை மரம் தறிக்க விண்ணப்பிப்போர் உங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

பனை தென்னை அபிவிருத்திப் பகுதி
யாழ்மாவட்டம்
[5923]


**துயரில் பங்கு கொள்ளுகின்றோம்**

எமது குழுவினால் வருடாவருடம் வெளியிடப்பட்டு வரும் மலருக்கு ''நல்லைக் குமரன் மலர்'' எனப் பெயர் குட்டி அதன் கௌரவ பதிப்பாசிரியராக 06 ஆண்டுகள் பணிபுரிந்து அண்மையில் வெளிவந்த பத்தாவது மலரையும் படித்துப் பரவசம் அடைந்த சைவப்பற்றும் தமிழ்ப் பற்றும் மிக்க

**தமிழ்மணி தெல்லியூர் நடராசா**



அவர்களின் மறைவு கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு பெரியாரது ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனின் தாள்பணிந்து இறைஞ்சுகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
[C/5019]


BATA
**கபிலா காலணியகம்**
DSI
பாட்டா, டி.எஸ்.ஐ, ரன்பா, சிப்பா
உள்ளிட்ட வெளிநாட்டு பாதணி வகைகள் அனைத்தையும்
கொழும்பு விலையில்
யாழ் நகரில் நீங்கள்
கொழும்பு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றார்கள்.
**கபிலா ஷூ பலஸ்**
இல.4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[C/5016]



வங்கக் கடலில் மச்சமாய் அவதரித்த திருநாளாம்
புரட்டாதி பூரணையில் சமுத்திர தீர்த்தமாடும்
வங்கக் கடல் கடைந்த மாதவ
ஆழி மழைக் கண்ணா உன் அடி சரணம்



**ஸ்ரீ வல்லிபுரா போட்டோ** **ஒளியருவி வீடியோ & போட்டோ**

வர்ண புகைப்படச் சுருள் பிரதியாக்கலும், புகைப்படத்துறை பொருட்கள் விநியோகமும்
வீடியோ படப்பிடிப்பு, புகைப்படப்பிடிப்பு, மணப்பந்தல் சேவை, அல்பம் தயாரித்தல்

புலோலி தெற்கு, புலோலி.
T.P:- 070-212720

545, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

15/4, முருகேசர் லேன் முத்திரைச் சந்தி, நல்லூர். T.P:- 021-2222604

[C/5018]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.